சூட்டிங் வகைகளை
ஒரே இடத்தில் பெற்று
உங்கள்
விருப்பத்திற்கேற்றவாறு
தைத்துக் கொள்ள
நாடுங்கள்

குமார்
தையலகம்
பெரிய கடை.
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சிறந்த முறையில்,
விரும்பிய வகையில்
தரமாகவும்
உரிய நேரத்திலும்
தையல் வேலைகளைச்
செய்து கொடுப்பவர்கள்

குமார்
தையலகம்
பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 28 புதன்கிழமை (14 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 18

நத்தாருக்கு முன்னர் பேச்சுக்கள்

பழைய பிரதிநிதிகளே வருவர்!

தொண்டாவுடன் எவரும் பேசுகின்றனர் இல்லையாம்!

அமைச்சரவை பற்றி அவரின் கவலை

கொழும்பு, டிச 14

ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான அமைச்சரவையில் மகிழ்ச்சியற்ற மனிதராக அமைச்சர் தொண்டமான் இருந்து வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

"அமைச்சரவைக் கூட்டத்தின் போது அமைச்சர்கள் எவரும் என்னுடன் பேசுகிறார்கள் இல்லையே."—என்று தொண்டமான் கடந்த வாரம் தமது கவலையைத் தெரிவித்துக்கொண்டார் என "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

ஹெரோயின் போதைவஸ்து கடத்தல்:

2 தமிழர் உட்பட மூவருக்கு மரண தண்டனை தீர்ப்பு!

கொழும்பு நீதிமன்றம் வழங்கியது

கொழும்பு, டிச 14

ஹெரோயின் போதை வஸ்துவை இலங்கைக்குள் கடத்தியது-வைத்திருந்தது ஆகிய குற்றச் சாட்டின் பேரில்—

இரு தமிழர்கள் உட்பட மூவருக்கு கொழும்பு நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்தது.

60 லட்சம் ரூபா பெறுமதியான 4 கிலோ ஹெரோயினை கடந்த வருடம் சந்தேக நபர்கள் இந்தியாவிலிருந்து கடத்தி வந்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தனர்.

சுப்பிரமணியம் சண்முகவேலு, பத்மநாதன் அண்ணாதேவமுனி கனில் ஆகிய மூவருக்குமே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இலங்கைச் சட்டத்தின்படி 2 கிராம் அல்லது அதற்கு மேல் போதை வஸ்துவை வைத்திருப்பவருக்கு மரண தண்டனை வழங்க சட்ட விதிகள் உண்டு. (ஒ-4)

புத்தாண்டுடன் யுத்த நிறுத்தம்?

கொழும்பு, டிசம்பர் 14

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் ஆரம்பமாகவிருக்கும் சமாதானப் பேச்சுக்களில் முதற்கட்டப் பேச்சுக்களில் பங்குபற்றிய அதே பிரதிநிதிகள் குழுவே கலந்து கொள்ளும் என கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இக்குழு அடுத்த கட்டப் பேச்சுக்காக நத்தாருக்கு சில தினங்களுக்கு முன்னர் — அனேகமாக அடுத்த வார நடுப்பகுதியில் — யாழ். வரக்கூடும் என்றும் —

அடுத்த சுற்றுப் பேச்சுக்குப் பின்னர் புத்தாண்டுடன் இருதரப்பு யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வரக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிய பிந்திய செய்தியை ஜனாதிபதி சந்திரிகாவே தனிப்பட்ட முறையில் தயாரித்ததாகவும் —

அச்செய்தியில் நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றை அடைவதற்கு சில முட்டுக்கட்டைகளுக்கு மத்தியிலும் சமாதானப் பேச்சுகளைத் தொடர்ந்து நடத்தும் தேவை வலியுறுத்தப்பட்டு இருப்பதாகவும் "சண்டே ஐலண்ட்" தெரிவித்தது.

ஜனாதிபதி சந்திரிகா முப்படைகளின் தளபதிகளுடனும் பொலிஸ் மா அதிபருடனும் உயர் நிலை மாநாடு ஒன்றை நடத்தினார் என்றும் —

விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு, நிறுத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தையை தொடருவது என்ற முடிவை அம் மாநாட்டில் அவர் அறிவித்தார் என்றும் — 'சண்டே ஒப்சேவர்" பத்திரிகை அதன் பாதுகாப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மீண்டும் பேச்சு நடத்த வரும் அரச தூதுக்குழுவில் முதற்கட்டப்பேச்சில் கலந்து கொண்டவர்களே இடம் பெறுவர் என்ற தகவலை "சண்டே ஐலண்ட்" வெளியிட்டுள்ளது.

எனினும் —

இரண்டாம் கட்டப்பேச்சுக்கு வரும் அரச தூதுக்குழுவினருக்கு எப்படி பேச்சு நடத்தப்படவேண்டும் என்ற விவரங்கள் இன்னும் தெரிவிக்கப்படவில்லை.

இச் சமாதானப் பேச்சு

(5 ஆம் பக்கம் பார்க்க)

உயர்தர பரீட்சை முடிவுகள் இம்முறை சுமாரானவை

யாழ்ப்பாணம், டிச. 14

கடந்த ஒகஸ்டில் நடந்த ஜி.சி.ஈ (உயர்தர) பரீட்சை முடிவுகள் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் வெளியாகின.

கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் மாலை விமான மூலம் எடுத்து வரப்பட்ட பரீட்சை முடிவுகள் காங்கேசன் துறையில் இருந்து 'கோமாரி' கப்பல் மூலம் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டன.

யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி பருத்தித்துறை துறைமுகத்தில் காத்து நின்று பரீட்சை முடிவுகளை கையேற்று உடன் யாழ். அலுவலகத்துக்கு எடுத்து வந்து, கோட்டங்கள் மூலம் அவற்றைப் பாடசாலைகளுக்கு விநியோகித்தார்.

கடந்த முறைகளிலும் பார்க்க இம்முறை பரீட்சை முடிவுகள் சுமாரானதாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தனியார் பரீட்சார்த்திகளின் முடிவுகள் நேற்று வரவில்லை. அந்த முடிவுகள் தொடர்பான வேலைகள் முடியவில்லை என்றும்—

இரு வாரங்களில் அவை வெளிவரும் என்றும் பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்டார்.

வழமையைவிட இம்முறை கூடிய எண்ணிக்கையானோர் நான்கு பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை
பாடசாலைகள் ரீதியான
பெறுபேறுகள்
விவரம் 5 ஆம் பக்கத்தில்

யாழ். இந்து, சாவகச்சேரி இந்து, ஹாட்லி

3 பாடசாலைகளில்

தலா 4 பேருக்கு 4'ஏ'!

வடக்கில் 29 பேர் 4 பாடங்களிலும் அதிவிசேட சித்தி

நேற்று வெளியான—யாழ் குடாநாட்டிற்கான—ஜி.சி.ஈ. (உயர்தரப்) பரீட்சை முடிவுகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி ஆகியமூன்று பாடசாலைகளிலும் தலா நான்கு மாணவர்கள் நான்கு பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றனர்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் மொத்தம் 29 மாணவர்கள் நான்கு பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கணிதப் பிரிவில் இராஜேந்திரன் குமரேஷ், சுப்பிரமணியம் மகேஸ்வரன் ஆகிய இருவரும் 4 'ஏ' பெற்றனர்

யாழ். மாவட்டத்தில் மருத்துவப் பிரிவில் 4 'ஏ' பெற்ற மூன்று மாணவர்களில் இருவர் யாழ். இந்துவைச் சேர்ந்தவர்களாவர். சிவசுப்பிரமணியம் சிவப்பிரியன், வெங்கடாசலம் சுதர்சன் ஆகியோரே அந்த இருவருமாவர்.

யாழ். மாவட்டத்தில்

[5 ஆம் பக்கம் பார்க்க]

புலிகளுக்கு வந்த ஆயுதம்

பர்மாவில் இறக்கப்பட்டது!

தமிழகத்தில் பயன்படுத்த எனக் கொண்டுவரப்பட்டதாம்

கொழும்பு, டிச. 14

உக்ரேனின் நிக்கொலேவ் துறைமுகத்தில் இருந்து கப்பலில் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படும் வெடிப்பொருள்களை விடுதலைப் புலிகள் தற்போது மியன்மார் என்றழைக்கப்படும் பர்மாவில் உள்ள தமது தளத்தில் இறக்கி வைத்திருப்பது விசாரணையில் இருந்து தெரியவந்திருப்பதாக "சண்டே ரைம்ஸின்" பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

"விடுதலைப் புலிகளின் மியன்மார்தொடர்பு"—என்ற இக்கட்டுரையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இந்திய வட்டாரங்களின்படி — பர்மாவில் விடுதலைப் புலிகள் முன்னாள் இராணுவ அதிகாரிகள் குழு ஒன்றுடன் தொடர்பு ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இந்திய, இலங்கைக் கடற்படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததால் வெடிப்பொருள்களுடனான கப்பல் மியான்மார் சென்றது.

உக்ரேன் நாட்டுப் பிரஜை ஒருவர், துறைமுக நகரான நிக்கொலேவில் கைது செய்யப்பட்டதை அடுத்தே, விடுதலைப் புலிகளுக்கு வெடிப்பொருள்கள் கப்பலில் ஏற்றப்பட்ட விவரம் வெளியானது.

பர்மாவில் உள்ள பல்வேறு போராளி அமைப்புக்களுடனும் விடுதலைப் புலிகள் தொடர்பு ஏற்படுத்தியிருப்பதாகவும் —

இப்போராளி அமைப்புகளில் சில இந்தியாவின் கிழக்குப் பகுதியில் பிரிவினை கோரிப் போராடிவரும் மிஸோரம், நாகலாந்து மற்றும் போடோ இன போராளி அமைப்புக்களுடன் தொடர்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காஷ்மீர் முஜாஹுதீன் போராளிக்குழு, அஸாமில் உள்ள அல்பா மற்றும் ஆந்திராவில் உள்ள நக்ஸலைட் போராளிக்குழுக்களுடன் தான் விடுதலைப் புலிகளின் தொடர்புகள் இருந்து வந்தன.

இலங்கையில் நடந்து வரும் யுத்தத்தில் பயன்படுத்துவதற்காக விடுதலைப் புலிகள் உக்ரேனில் இருந்து வெடிப்பொருள்களைக் கொண்டுவரவில்லை.

அவை தமிழ் நாட்டில் பயன்படுத்தப்படவே கொண்டுவரப்பட்டன.

தமிழ் நாட்டில் திராவிட நாடு கோரும் சுமார் 20 அரசியல் மற்றும் போராளி அமைப்புகளுடன் விடுதலைப் புலிகளின் தொடர்பு இன்னும் இருந்து வருவதாகவும்—

சமூக வரலாற்றுச் சங்கம், மனித உரிமைகழகம், தமிழ் நாடு மக்கள் இயக்கம், அறிவு இயக்க பேரவை, தமிழர் தேசிய இயக்கம் ஆகியவை அவற்றில் சில என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இந்திய வட்டாரங்களின்படி பர்மாவில் வைத்து தமிழர் மீட்புப் படையைச் சேர்ந்த — குறைந்தது 2 ஆயி

(5 ஆம் பக்கம் பார்க்க)

தெற்கில் மீண்டும் ஜே.வி.பி.?

கொழும்பு, டிச. 14

தென் இலங்கையில் சமீப காலமாக இடம்பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்கள் ஜே. வி. பி இயக்கம் மீண்டும் தலையெடுத்து வருகிறதா என்ற அச்சத்தை ஏற்படுத்தி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சிரேஷ்ட இரகசியப் பொலீஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி "சண்டே லீடர்" இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இந்த விடயம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கவலையை ஏற்படுத்தியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், டிச. 14

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர் (ஓ)

உணவுப் பொருள்கள் தடையின்றி கிடைப்பதற்கு புதிய ஏற்பாடுகள்

செயலகக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ். மாவட்டத்தில் உணவு மற்றும் பாவனைப் பொருள்களை மக்களுக்கு தங்குதடையின்றி விநியோகிக்க வசதியாக உணவு விநியோக நடைமுறை ஒருங்கிணைக்கப்படும்.

செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குறித்து ஆராய்வதற்காக யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர்கள், அத்தியாவசிய சேவைத் திணைக்களங்களைச் சேர்ந்த தலைவர்கள், ப.நோ.கூ. சங்க தலைவர்கள்' தனியார் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு:-

★ யாழ். மாவட்டத்தில் 56 ஆயிரம் குடும்பத்தினர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களுடன் ஒரு லட்சத்து 85 ஆயிரம் குடும்பத்தினரும் குடாநாட்டில் வாழ்கின்றனர் அகதிகளுக்கு மட்டும் [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

3 கோடி பேர் எயிட்ஸுக்கு இலக்காவர்

புதுடில்லி, டிச 14

இந்தியாவில் எயிட்ஸ் பரவி வரும் வேகத்தின்படி இரண்டாயிரம் ஆண்டளவில் அங்கு எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 3 கோடியாக இருக்கும் என இந்தியத் தனி [illegible]

முச்சந்தி முரளி

பச்சை நிறம் மாறாத உவரைக் கண்டால் நீலக்காரருக்கு 'அலர்ஜி' வர்றது நியாயந்தானே......!

தனிப்பட்டோரின் முடிவுகளை பெற முயற்சி!

யாழ்ப்பாணம், டிச. 14

ஜி. சி. ஈ (உயர்தரப்) பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் யாழ் கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேரவில்லை என்றும்—

அவற்றைப் பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் யாழ். கல்வி வலயம் I இன் பணிப்பாளர் செல்வி .தி. பெரியதம்பி அறிவித்துள்ளார்.

ஆண்டு 9 வகுப்பில்

கடந்த வருடம் பயின்ற மாணவருக்கும் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச.14

இந்த வருடத்தில் பத்தாம் ஆண்டில் பயின்ற மாணவர்களுக்கும் இன்று கனிஷ்ட தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சை நடைபெற உள்ளது.

இந்த வருடத்தில் (1994 இல்) 9ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்களுக்குரிய, கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ் பரீட்சைக்கான வினாப் பத்திரங்கள், பலாலியூடாக நேற்றுக் காலை பருத்தித்துறை வந்து சேர்ந்தன.

அந்த வினாப் பத்திரங்களோடு சென்ற வருடத்தில் (1993இல்) 9 ஆம் ஆண்டு பயின்ற மாணவர்களுக்கான

(5 ஆம் பக்கம் பார்க்க)

இயக்கத்தின் சட்டவிரோத நடவடிக்கைகள் பற்றிய

இரகசியங்கள் அம்பலமாகாமல் தடுக்கவே ஈ.பி.டி.பி. பிரமுகர் கொலை!

கொழும்பு, டிச. 14

ஈ. பி. டி. பி. அமைப்பின் உள் இரகசியங்கள் அம்பலமாவதைத் தவிர்க்கவே அந்த அமைப்பின் முக்கிய பிரமுகராக இருந்து பின்னர் விலகிச் சென்றவரான உதய குரிய குமார என்பவர கொல்லப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் உள்ள ஈ.பி. [illegible] தலைமை அலுவலகத்தில் தொழில் புரிந்து வந்த [illegible]குமார பின்னர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

இக்கொலை தொடர்பாக ஈ.பி.டி.பி. தலைமை அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈ.பி.டி.பி. அமைப்பினால் கறுப்புப் புள்ளியிடப்பட்டவர்களைக் கைதுசெய்யும் பொறுப்பு இவ்விரு சந்தேக நபர்களிடமும் வழங்கப்பட்டிருந்தது பொலிஸ் விசாரணையில் வெளிவந்ததாக "சண்டே லீடர்" பத்திரிகை தெரிவித்தது.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் திருமலைப் பகுதியில் ஈ.பி.டி.பி. தலைவர்களில் ஒருவராக இருந்தார் என்பதும் தெரிய வந்தது.

இறந்தவர் யாழ்.வாசி என்றும் சேகர் அல்லது குன் என்று அழைக்கப்பட்டு வந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலையில் வெ

[6 ஆம் பக்கம் பார்க்க]

NEW SCIENCE HALL
KANNATHIDDY, JAFFNA.

DAY CLASS

(94 A/L பரீட்சைக்குத்
தோற்றிய மாணவர்களுக்குரியது)

PHYSICS - CHEMISTRY
BOTANY - ZOOLOGY
PURE/APP- MATHS

★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

ஆரம்பம்:- 15-12-1994
வியாழன் காலை 10.00 மணி

(சி/9823)

புதிய பதவி உயர்வுத் திட்டம் குறித்து இராணுவத்தின் மத்தியில் அதிருப்தி

மீளாய்வு செய்ய சந்திரிகா உத்தரவு

கொழும்பு, டிச. 14

இராணுவத்தினருக்கு வழங்கப்படவுள்ள பதவி உயர்வுகள் குறித்து கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா தயாரித்துக் கையளித்த பதவி உயர்வுத் திட்டத்தை மீளாய்வு செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

போர்முனையில் பணிபுரியும் கனிஷ்ட அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்படும் விதத்தில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள சிரேஷ்ட அதிகாரிகள் பலர் இத்திட்டத்தின் கீழ் பதவி உயர்வுக்குச் சிபாரிசு செய்யப்படவில்லை என்று அறியப்படுகிறது.

இராணுவத்தில் எந்தப் பிரிவை போர் முனைக்கு அனுப்புவது என்பதை இராணுவத் தலைமைப்பீடம் தான் தீர்மானிக்கின்றது. எனவே போர் முனையில் பணிபுரிபவர்களுக்கு பதவி உயர்வு மற்றையோருக்கு பதவி உயர்வு இல்லை என்று தீர்மானிப்பது தவறான கொள்கையாகும் என்று பதவி உயர்வு கிடையாதோர் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

தொழிற்சங்கப் பிரச்சினையை தீர்க்க அவகாசம் கோருகிறார் சந்திரிகா

கொழும்பு, டிச. 14

தொழிற்சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க ஓராண்டுகால அவகாசம் தரும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அதற்கிடையில் தங்கள் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக வேலை நிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்க வேண்டாம் என்றும் அவர் தம்மைச் சந்தித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளைக் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர்கள் இடமாற்றம்

யாழ். மாவட்டத்திற்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஏனையபாகங்களிலிருந்து 12 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படும அதேசமயம் 17 ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்தில்இருந்து வடக்கு-கிழக்கிலுள்ள ஏனைய மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

வடக்கு -கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முதலாவது இடமாற்றப் பட்டியல் வெளிவந்துள்ளது. இப்பட்டியலில் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றத்தில் மொத்தமாக 39 ஆசிரியர்கள் இடமாற்றம் பெறுகின்றனர்.

இடமாற்றப் பட்டியலை நல்லூரிலுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பணிமனையில் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

கிழங்கைப் பிடுங்கி மரத்தை நட்ட திருடர்

உரும்பிராய், டிச. 14

உடுவில் கிழக்குப் பகுதியில் ஒரு விவசாயியின் மரவள்ளித் தோட்டத்தில் புகுந்த திருடர் மரவள்ளியைப் பிடுங்கிக் கிழங்குகளை எடுத்துக் கொண்டு மீண்டும் அதன் மரத்தை நிலத்தில் நாட்டி மண்ணை மூடி மறைத்துள்ளனர். இவ்வாறு பல நாட்களாக நடைபெற்று வந்துள்ளது.

விவசாயி இதனை கவனிக்கவில்லை. மழை தொடர்ந்து பொழிந்ததனால் இறைப்பு இல்லையாதலால் இந்த விடயம் இவரின் கவனத்திற்கு வரவில்லை.

ஒரு நாள் தமது தேவைக்கு மரவள்ளிக்கிழங்கு பெறுவதற்காக மரத்தைப் பிடுங்கியபோது வெறும் மரம் இருந்ததைக் கண்டார். தொடர்ந்து பரிசோதித்தபோது சுமார் 50 மரங்கள் இக் கதியில் இருந்தன.

திறமையான திருடர்கள்!

(க-151)

மழைக்காக விசேட பூசை

தென்மராட்சிப் பகுதியில் கடும் வரட்சி நிலவுவதால் நெற்பயிர்கள் அழியும் அபாய நிலை தோன்றியுள்ளது. வயல்களில் நீரின்மையால் வெட்டுப்பூச்சியின் தாக்கத்தை கட்டுப்படுத்த மருந்து தெளிக்க முடியவில்லையென விவசாயிகள் கவலை தெரிவித்தனர்

இப்பகுதியில் மழைவேண்டி ஆலயங்களில் விசேட பூஜைகள் நடத்தப்பட்டு வருகிறது.

தொலைக்கல்வி செயலமர்வு

1993/95 ஆம் ஆண்டு பயிலுநர் ஆசிரியர்களுக்கான 5 நாள் தொலைக்கல்வி செயலமர்வு நாளை 15 ஆம் திகதியும், 91/93 ஆம் ஆண்டு பயிலுநர் ஆசிரியர்களுக்கான 5 நாள் தொலைக்கல்வி அமர்வு இம்மாதம் 18 ஆம் திகதியும் ஆரம்பமாகும் என கரவெட்டி தொலைக்கல்வி சிரேஷ்ட போதனாசிரியர் திரு. கு. தர்மசிறிராஜா அறிவித்துள்ளார். (க-173)

தென்மராட்சிப்பகுதி எங்கும்

மலேரியா, வயிற்றுளைவு தீவிரமாகப் பரவுகின்றன

தென்மராட்சி டிச. 14

தென்மராட்சிப் பகுதியில் மலேரியாக் காய்ச்சல் வயிற்றுளைவு போன்ற நோய்கள் தீவிரமாக பரவி வருகின்றன.

இந் நோய்களினால் பீடிக்கப்பட்ட பலர் இப் பகுதியில் உள்ள ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனால் வார்ட்டுகள் நிரம்பி வெளிவிறாந்தையில் கூட நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறுகின்றனர்.

வெளிநோயாளர் பிரிவுகளிலும் தினமும் நூற்றுக் கணக்கானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உ

உள்ளத்தனையது உயர்வு

இளம் பிராயத்திலேயே சொற்பொழிவுக் கலையில், தங்கள் பெயர்களை நிலைநிறுத்தி, அகில இலங்கை கம்பன்கழகத்தின் தமிழ்ப் பணிகளில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்தி உழைத்து வந்த

செல்வர்கள்

ஸ்ரீ. பிரசாந்தன் ச. மணிமாறன்
(குட்டி ஜெயராஜ்)

ஆகியோர்

வெளிவந்த க. பொ. த. (உ/த) பரீட்சையில் மிகத் திறமையாகச் சித்தியெய்தியமைக்கு எமது மனப்பூர்வமான

வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ. பிரசாந்தன் அவர்கள் கலைத்துறையில் மாவட்டத்தில் முதல் மாணவனாக (3A B) வந்திருப்பது கம்பன் கழகத்தின் சேவைக்கு தமிழ்த்தாய் தந்த பரிசெனவே கருதுகிறோம்.

வளர்க அவர்கள் பணி!

ப. தயாபரன்,
அமைப்பாளர்

கவிஞர் மன்னவன் கந்தப்பு,
தலைவர்

வடமராட்சி கம்பன் கழகம்

(சி/9822)

இன்றைய நிகழ்வுகளை
நாளைய நினைவுகளாக்கி
நவீன தொழில்நுட்ப முறையில்
வீடியோ படமாக்கிட —
புகைப்படம் எடுத்திட

வீடியோ ஹமல்
மானிப்பாய் வீதி [illegible] யாழ்ப்பாணம்

(34188)

உ
சிவமயம்

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்
(யாழ். வண்ணை சிவன் கோயில்)

திருவாசகப் பெருவிழா

★ தேவஸ்தான மண்டபத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ம், 17-ம், 18-ம் தினங்களில் நடைபெறும். ★

★ நிகழ்ச்சிகள் ★

16 - 12 - 1994 வெள்ளி

தலைவர்:
திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள்
(அதிபர் - யாழ். இந்துக் கல்லூரி)
மாலை 5-30 — 7-00 மங்கள இசை
அளவையூர் திரு. எஸ். சிதம்பரநாதன் குழுவினர்
மாலை 7-00 மணிக்கு மங்கள விளக்கேற்றல்
திரு. கனகசபை தர்மகுலசிங்கம் அவர்கள்
மாலை 7-00 — 7-15 திருவாசகம் ஓதல்
யா/இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள்
மாலை 7-15 — 7-30 வரவேற்புரை
மாலை 7-30 — 7-45 தலைமையுரை
மாலை 7-45 — 8-00 சிறப்புரை
இரவு 8-00 மணிக்கு இன்னிசைக் கச்சேரி
இன்னிசை வேந்தன்
திரு. பொன். சுந்தரலிங்கம் குழுவினர்
நன்றியுரை

17 - 12 - 1994 சனி

தலைவர் :
திரு. து. சந்தோசம் அவர்கள்
(அதிபர், யாழ்/வைத்தீஸ்வராக் கல்லூரி)
மாலை 5-30 மணிக்கு மங்கள விளக்கேற்றல்
மாலை 5-30 — 5-45 திருவாசகம் ஓதல்
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவர்கள்
மாலை 5-45 — 6-00 வரவேற்புரை
மாலை 6-00 — 6-15 தலைமையுரை
மாலை 6-15 — 7-30 சிறப்புச் சொற்பொழிவு
செந்தமிழ்த் திலகம்
செல்வி புஸ்பா செல்வநாயகம்
பொருள்:
மகளிர் வளர்த்த சமயம்
இரவு 7-30 மணிக்கு இன்னிசைக் கச்சேரி
இசைக் கலைமணி
திரு. வர்ண. ராமேஸ்வரன் குழுவினர்
நன்றியுரை

18 - 12 - 1994 ஞாயிறு

தலைவர்:
திரு. ஐ. துரைராஜா அவர்கள்
(அதிபர் - யாழ்/ நாவலர் மகாவித்தியாலயம்)
மாலை 5-30 மணிக்கு மங்கள விளக்கேற்றல்
திரு. த. அருளானந்தம் அவர்கள்
மாலை 5-30 — 5-45 திருவாசகம் ஓதல்
யா/ நாவலர் மகாவித்தியாலய மாணவர்கள்
மாலை 5-45 — 6-00 வரவேற்புரை
மாலை 6-00 — 6-15 தலைமையுரை
மாலை 6-15 — 7-30 சிறப்புச் சொற்பொழிவு
கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்/ பல்கலைக்கழகம்)
இரவு 7-30 மணிக்கு பண்ணிசைக் கச்சேரி
பண்ணிசைச் செல்வர்
தாவடியூர் திருஞானசம்பந்தர் அவர்கள்
நன்றியுரை

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

வை. கந்தப்பச் செட்டியார்.
தர்மகர்த்தா.

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்,
14.— 12 — 1994.

(சி-9821)

சார்க் மாநாட்டுக்கு முன்
சந்திரிகா இந்தியா பயணம்

கொழும்பு, டிச. 14

சார்க் உச்சி மாநாட்டுக்கு முன்பதாக தாம் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் வாய்ப்பிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அறிவித்திருக்கிறார்.

நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இத் தகவலை வெளியிட்டார்.

சார்க் உச்சிமாநாடு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி 'இந்தியத் தலைநகர் புதுடில்லியில் ஆரம்பமாக விருக்கிறது.

இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஜனாதிபதி ஏற்கனவே சம்மதம் தெரிவித்துவிட்டார் என்பது தெரிந்ததே. (இ-எ)

இனப்பிரச்சினைத் தீர்வை சபை விவாதிக்க வேண்டும்

முஹம்மது கோருகிறார்

''வடக்கு-கிழக்கு இனப் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வு முன்வைக்கப்படுகிறதோ அது தொடர்பாக சபைக்கு அறிவித்து முழுமையான விவாதமும் நடத்தப்பட வேண்டும்''

இப்படிக் கூறியுள்ளார் முன்னாள் சபாநாயகரும், ஐ. தே. க. எம்பியுமான எம். எச். முஹம்மது.

நாடாளுமன்ற விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''புலிகள் தாம் மட்டுமே தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்றும், இ. தொ. கா. உட்பட தமிழ்கட்சிகள் யாவும் துரோகிகள் எனவும் அவுஸ்திரேலியாவில் கூறியுள்ளனர் என்றும் அவர் கூறினார். (க-3)

பிரபாவை நாடு கடத்தும்படி இந்தியா கோரமாட்டாது

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை நாடு கடத்தும்படி கோருவதில்லை என்று இந்திய அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்னொரு நாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தால் அன்றி அவரை நாடு கடத்தும்படி கோர முடியாது என்பதே இதற்குக் காரணம் என்று இந்திய ராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி, 'சண்டே லீடர்' தகவல் வெளியிட்டுள்ளது.

ஒருவர் காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை என்றால் அவரை நாடு கடத்துவது என்ற கேள்விக்கே இடமில்லை என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பிரபாகரன் வட பகுதியில் இருக்கிறார். அங்கு இலங்கை ஆயுதப் படையினர் செல்ல முடியாத நிலையில் உள்ளனர். பலாலி முகாமையும் குடாநாட்டை அடுத்துள்ள 7 சிறு தீவுகளையும் தவிர ஏனைய பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

காமினி கொலை!

விசாரணைக்கு உதவுமாறு சிறிமா கோருகிறார்

கொழும்பு, டிச. 14

காமினி திஸாநாயக்கா கலந்துகொண்ட ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டங்களைப் படமெடுத்தவர்கள் அது தொடர்பான புகைப் படங்கள், வீடியோ நாடாக்களை இரகசியப் பொலிஸாருக்கு கொடுத்துதவும்படி சிறிமா திஸாநாயக்கா பொது மக்களைக் கேட்டுள்ளார்.

காமினி திஸாநாயக்காவின் படுகொலை பற்றிய விசாரணைக்கு இது உதவும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

மனித உறுப்பு விற்பனை:

பெண் டாக்டர் உட்பட மூவர் பொலிஸில் சரண்

கொழும்பு, டிச. 14

மாற்று உடல் உறுப்புகளுக்காக குழந்தைகளை விற்பனை செய்யும் மோசடி தொடர்பாக தேடப்பட்டு வந்த பெண் டாக்டர் ஒருவரும் மற்றும் மூவரும் கொழும்பு கொம்பனித் தெரு பொலிஸாரிடம் சரணடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உடல் உறுப்புகளுக்காக குழந்தைகளை விற்பனை செய்யும் மோசடி கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து இரண்டு குழந்தைகளுடன் 2 பெண்கள் அண்மையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே. (இ-எ)

புலிகளின் குரல் வானொலியில்

14 — 12 — 1994

புதன் இரவு

★ 8-01 — குயிலோசை — நிகழ்ச்சியில் ந. கோகுலன் எழுதிய ''வெற்றிலை''கிராமிய நிகழ்வு
★ 8-20 — ஏர்முனை — நிகழ்ச்சியில் ''நவத்தார் குடும்பம்'' குறு நாடகம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம் — த. பாபு எழுதிய ''பாரம்''
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

15 — 12 — 1994

வியாழன் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — விடுதலை கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

ஆலயங்களில்

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும். [க-31]

சுகாதார பரிசோதனை

வடமராட்சிப் பகுதியில் உள்ள தேநீர்ச்சாலைகள், உணவகங்களில் சுகாதார பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவின் உணவு, மருந்துப் பகுதியினர் இப்பரிசோதனையை மேற்கொள்கின்றனர்,

கடந்த வாரம் நெல்லியடிப் பகுதியிலுள்ள தேநீர்ச்சாலைகள், உணவகங்களும், திங்கட்கிழமை பருத்தித்துறையில் உள்ள தேநீர்ச்சாலைகள் உணவகங்களும் சுகாதாரப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

சுகாதாரம் பேணாத தேநீர்ச்சாலைகள், உணவகங்களுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (க-173)

சந்திரானந்த டீ சில்வா செயலர் பதவி ஏற்க மறுப்பு

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பதவியை ஏற்க தேர்தல் ஆணையாளரான சந்திரானந்த டீ சில்வா மறுத்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து தற்போதைய செயலாளரான ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் பதவிக்காலத்தை நீடிக்க அரசு முடிவு செய்ததாகவும் ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டது.

தகுந்த சிவில் அதிகாரி ஒருவர் கிடைக்காததே ஜெனரல் வனசிங்காவின் பதவி நீடிப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

முக்கிய பிரமுகர்களிடம் பணம் பறிக்கும் கோஷ்டி

தென் இலங்கையில் இயங்குகிறது

கொழும்பு, டிச. 14

தென் இலங்கையில் முக்கிய பிரமுகர்களை மிரட்டிப் பணம் பறிக்கும் தீவிரவாதக் கோஷ்டி ஒன்று செயல்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டை மீட்கும் முன்னணி என்ற பெயரில் இத் தீவிரவாதக் குழு செயல்பட்டு வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இம் முன்னணியைச் சேர்ந்த சிலர் ஏற்கனவே சில முக்கிய பிரமுகர்களை 2லட்சம் ரூபா தரும்படி மிரட்டியுள்ளார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்திரசேகரன் விரைவில் அமைச்சராகலாம்

அமைச்சர் நிமால் சிறிபால தகவல்

கொழும்பு, டிச. 14

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு. பெ. சந்திரசேகரன் விரைவில் அமைச்சராகலாம்.

வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் பொது வசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா முன்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதியமைச்சராக நியமிக்கப்பட்ட திரு. பெ. சந்திரசேகரன் தமது அமைச்சின் கடமைகளை ஏற்றுக் கொண்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. சந்திரசேகரன் நீண்டகாலமாக அரசியல் போராட்டம் நடத்தி வருகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

அன்னை ஸ்ரீசாரதாதேவி ஜயந்தி நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், டிச. 14

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் ஜயந்தி விழா எதிர்வரும் 25ஆம் திகதி காலை 5-30 முதல் மாலை 7 மணிவரை அனுஷ்டிக்கப்படும்.

சுவாமி விவேகானந்தர் சிகாகோ உரை சிறப்புப் பரிசுகள் அன்று மாலை 5 மணிக்கு வழங்கப்படும்.

ஜயந்தி நிகழ்ச்சிகள் 28ஆம் திகதி சேவாச்சிரமத்தின் பொலிகண்டி கந்தவனக் கிளையில் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி இரவு 7மணிக்கு நிறைவுறும். (க)

ரணில் திருமணம்

கொழும்பு, டிச. 14

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா அடுத்த மாதம் திருமணம் செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பியகம தொகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரையே அவர் திருமணம் செய்யவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ.எ)

நிர்வாக சேவை தரம்-II பதவி உயர்வு

இலங்கை நிர்வாக சேவையின் 2 ஆம் வகுப்பு — 2 ஆம் தரத்துக்கு பதவி உயர்வு வழங்க பொது நிர்வாக அமைச்சு முடிவுசெய்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர் ஊடாக இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்றுநிருபம் அனைத்து திணைக்களத்தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

68 வகையான அரச பதவிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன. (ஐ-3)

பருத்தித்துறை வைத்தியசாலை:

டாக்டர் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச. 14

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய், தெல்லிப்பளை வைத்தியசாலைகளில் இருந்து இரு வைத்தியர்கள் வாரம் இரு நாட்கள் இங்கு கடமைக்குச் சமுகமளிக்கின்றனர்.

60 வயதுடன் சேவைக் காலம் முடிவடையும் அரசின் உத்தரவுக்கு ஏற்ப பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடமையில் இருந்த இரு வைத்தியர்கள் ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்து அவ் வைத்தியசாலையின் வைத்தியப் பணிகள் பாதிக்கப்பட்டிருந்தன.

பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுப் பணிப்பாளரின் ஏற்பாட்டின்படி இந்த வாரம் முதல் இந்த டாக்டர்கள் அங்கே தற்காலிக சேவையினைத் தொடங்கியுள்ளனர்.

வாரம் ஒவ்வொரு திங்களும், வெள்ளியும் இவர்களது வைத்திய சேவை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இடம்பெறும். (இ-15)

கப்பலில் வந்து திரும்பிய தொற்று நீக்கும் கருவி!

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ். போதனா வைத்தியசாலைக்கு எனக் கொழும்பில் இருந்து ''பிளாம்பயான்'' கப்பலில் எடுத்துவரப்பட்ட ''தொற்று நீக்கி'' இயந்திரம் கடந்த மாத இறுதியில் பெய்த மழை மற்றும் சீரற்ற கால நிலையால் கப்பலில் இருந்து இறக்க முடியாமல் போனது.

தற்சமயம் இந்த ''தொற்று நீக்கி'' இயந்திரம் திருகோணமலை துறைமுகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

''பிளாம்பயான்'' கப்பல் மீண்டும் வரும் போது இத் ''தொற்று நீக்கி'' இயந்திரத்தையும் ஏற்றி வரும் என வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-17)

படித்த யுவதிகளுக்கு கைப்பணிப் பயிற்சிகள்

விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

இலங்கை கைப்பணிச் சபை படித்த இளம் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கோடு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அழகான பொம்மைகள் செய்யும் பயிற்சி நெறிக்காகவே இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆறு மாத காலத்துக்கு ஊக்குவிப்புப் பணமாக நாளொன்றுக்கு பதினைந்து ரூபா வழங்கப்படும். தமது சுய முயற்சியினால் செய்யும் பொம்மைகளை விற்பனை செய்யும் போது கிடைக்கப் பெறும் பணமும் பயிற்சியில் உள்ளவர்களுக்குக் கிடைக்கும்.

இந்தப் பயிற்சியினைப் பெற விரும்பும் இளம் யுவதிகள் இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன் பொம்மை நிலையம், இலங்கைக் கைப்பணிச் சபை, இலங்கை நாயகி சன சமூக நிலையம், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். [க-77]

இனப்பிரச்சினைக்கு முடிவு பயமின்றி எடுக்க வேண்டும்

அமைச்சர்நிமால் சில்வா பேட்டி

கொழும்பு, டிச. 14

இனப்பிரச்சினை ஒரு தேசியப்பிரச்சினை. பயமின்றி முடிவு ஒன்றை எடுக்க வேண்டும்.

வீடமைப்பு நிர்மாணத் துறை பொது வசதிகள் அமைச்சர் திரு நிமால் சிறிபால டி சில்வா கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்தபேட்டியில் இவ்வாறு கூறினார்.

இப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

சகல இனத்தவர்களும் தன்மானத்தோடும் ஆகம கௌரவத்தோடும் வாழ்வதற்கு பாதிப்பு எற்படாத வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு அமையும் இப்படியான தீர்வு காணப்படாவிடின் தீர்வு நிலைக்காது.

சிறுபான்மை மக்களைப் போன்று பெரும்பான்மை மக்களும் ஏற்றுக்கொள்ளும் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும். அப்போதே தீர்வு நிரந்தரத் தீர்வாக அமையும்.

எல். ரி. ரி. ஈயுடன் பேசவேண்டும். ஏனைய தமிழ்க் கட்சிகளோடும் பேச வேண்டும். எல். ரி. ரி. ஈ. இணங்கினாலோ இணங்காவிட்டாலோ இனப் பிரச்சினைக்கு நாம் வழங்கும் தீர்வு என்ன என்பதை மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்று அமைச்சர் சில்வா கூறினார். (க)

வாகன வசதி நிறுத்தத்தால் சிரமம்

மயிலணி, டிச. 14

தற்பொழுது கந்தரோடை கந்தையா உபாத்தியார் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையின் கீழ் இயங்கும் முதியோர், குழந்தைகள் [illegible] வாகன வசதி நிறுத்தப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

இதனால் டாக்டர்களும் ஊழியர்களும் வரமுடியாமலும், உபகரணங்கள் மருந்துகள் ஆகியவற்றைக் கொண்டு செல்ல முடியாமலும் இருப்பதாகக் கூறப்படுகிறது. (க-89-152)

வாழைக்குலை இரவில் திருட்டு

உரும்பிராய் பகுதியில் அண்மைக் காலத்தில் வாழைக்குலைகள் அடிக்கடி திருட்டுப் போவதாகப் புகார் கூறப்படுகிறது.

தோட்டங்களில் உள்ள வாழைக்குலைகள் இரவு வேளைகளில் மாயமாக மறைந்து விடுகின்றன.

மூக்கு கண்ணாடி வழங்கல்

தென்மராட்சி, டிச.14

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பகுதியில் உள்ள வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 50 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை கடந்த 11 ஆம் திகதி வழங்கினர். (க-117)

200 சதவீதமானோர் வாக்களிப்பு:
ஊர்காவற்றுறையில் சாதனை!

ஓகஸ்ட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சாதனை நிகழ்த்திய ஊர்காவற்றுறைத் தொகுதி ஜனாதிபதித் தேர்தலின் மூலம் மீண்டும் சாதனையை நிகழ்த்தி இலங்கை தேர்தல் வரலாற்றில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளில் ஒன்றான ஊர்காவற்றுறை தொகுதியில் மாத்திரமே பெருமளவு நிலப்பரப்பு அரச படையினதும், அவர்களுடன் இயங்கும் தமிழ்க்குழு ஒன்றினதும் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

எனவே அரசாங்கமும், அதன் தேர்தல் திணைக்களமும் யாழ். மாவட்டத்தில் தேர்தல் நடைபெற்றதாக காண்பிப்பதற்காக ஊர்காவற்றுறை தொகுதியையே நம்பியிருந்தன.

ஊர்காவற்றுறை மக்கள் எண்ணிக்கை

ஊர்காவற்றுறையை அரச படையினர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததன் பின்னர் இங்கு வாழும் மக்கள் எண்ணிக்கை சிறுவர், சிறுமியர், மாணவர்கள், வயோதிபர் உட்பட 9,000க்கும் குறைவானதாகும்.

அதிலும் அங்குள்ள வாக்காளரது எண்ணிக்கை 5,000க்கும் குறைவானதாகும். இதனை தீவுப்பகுதி அரசாங்க அதிபர் பணிமனையே உத்தியோகபூர்வ கணிப்பீடு செய்திருந்தது.

ஆனால் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சுமார் 11,000க்கும் மேற்பட்ட வாக்குகளும் ஜனாதிபதித் தேர்தலில் 14,000க்கும் அதிகமான வாக்குகளும் ஊர்காவற்துறைத் தொகுதியில் அளிக்கப்பட்டிருந்ததாக தேர்தல் முடிவுகள் வெளிவந்திருந்தன.

ஊர்காவற்துறை தொகுதி இடம் பெயர்ந்த வாக்காளர்களில் சுமார் நூறு வரையானவர்கள் கூட விண்ணப்பிக்கவில்லை என்பது வேறு விடயம். எனவே எப்படி இருமடங்குக்கும் அதிகமானவர்கள் வாக்களித்தார்கள் என்பது பெரும் வியப்பினையும் கேள்விக்குறியினையும் ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை நடைபெற்ற நாட்டின் பொதுத் தேர்தலிலாயினும் சரி, ஜனாதிபதித் தேர்தலிலாயினும்சரி நூறுவீத மானவர்கள் வாக்களித்ததாகவோ அல்லது 90 சதவீதமானவர்கள் வாக்களித்ததாகவோ இல்லை.

200 வீத வாக்களிப்பு

ஆனால் இம்முறைத் தேர்தலில் மாத்திரமே 200 சதவீதத்துக்கும் அதிகமான— அதாவது உள்ள வாக்காளரை விட இருமடங்கு அதிகமான வாக்குகள்—பதிவாகி ஊர்காவற்றுறைத் தொகுதி தனது சாதனையை இருதடவையும் நிரூபித்துள்ளது.

புங்குடுதீவில்

கடந்த பொதுத் தேர்தலில் புங்குடுதீவுப் பகுதியில் சுமார் 500[illegible] வாக்காளர்களே [illegible] அரச கண[illegible]யது.

ஆனால் புங்குடுதீவின் அனைத்து வாக்குச் சாவடிகளிலுமாக சுமார் 5,500 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன. அது போன்று கரம்பன், நாரந்தனை, சுருவில், வேலணை ஆகிய பகுதிகள் உள்ளடங்கலாக ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் சுமார் 700 மக்களே இருப்பதாகவும் அதிலும் வாக்காளர் தொகை 500க்கும் குறைவாகவே இருக்கின்றனர் என்றும் அரச மதிப்பீடுகள் தெரிவித்தன.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் கரம்பன் சண்முகநாத வித்தியாலய 1ஆம், 2ஆம் வாக்குச் சாவடிகளில் 1896 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன.

கரம்பனில் நடந்த தில்லுமுல்லுகள்

கரம்பனில் நடந்த மோசடி

இது பற்றி தேர்தல் எப்படி நடக்கின்றது என அவதானிக்க சென்ற ஒருவர் கரம்பன் சண்முகநாத வித்தியாலய [illegible] 125 இற்கும் மேற்பட்டவர்கள் வாக்களித்ததாகவும் — இதில் ஏறக்குறைய 50பேர் மாணவப் பருவமுடையவர்கள் என்றும் —

இவர்களே திரும்பத் திரும்ப வாக்காளர் அட்டைகளை கொண்டு வந்து வாக்களித்தனர் என்றும்— இதனால் சுமார் 2000 வரையான வாக்குகள் அங்கு பதிவாகியதாகவும் கூறினார்.

தேர்தல் கடமைகளில் இருந்தவர்களும் வாக்காளர் அட்டை கொண்டு போன எல்லோரையும் வாக்களிக்க இடமளித்ததாகவும் பெண்கள் ஆண்களது வாக்காளர் அட்டைகளையும் ஆண்கள் பெண்களது வாக்காளர் அட்டைகளையும் கொண்டு சென்ற போது கூட வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் பால் மாற்றம், ஆள்மாறாட்டம், மாணவர் என்ற பேதமின்றி சுமார் 50க்குட்பட்ட எண்ணிக்கையானவர்கள் ஏறக்குறைய 1,750 வாக்குகள் வரை எந்தவிதமான ஆட்சேபனையும் இன்றி வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் 16 பொதுத் தேர்தலில் வாக்காளர் அட்டைகள் எதுவும் வாக்காளருக்கு விநியோகிக்கப்படவில்லை.

அதற்குப் பதிலாக வாக்காளருக்கு றோணியோ செய்யப்பட்ட பேப்பர்களே விநியோகிக்கப்பட்டன. அதுவும் தேர்தலுக்கு முன்தினமன்று சில பகுதிகளில் தேர்தல் அலுவலர்களிடமும் பிரஜைகள் குழுக்களிடமும் அவை வழங்கப்பட்டன.

தங்கள் சுயவிருப்பின்படி அவர்கள் அவற்றை விநியோகம் செய்திருந்தனர். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் ஏனைய மாவட்டங்களில் வழங்கப்பட்டது போன்ற தேர்தல் அதிகாரியினால் ஒப்பமிடப்பட்ட வழக்கமான வாக்காளர் அட்டைகள் வழங்கப்பட்டன.

பொதுத் தேர்தலின்போது ஈ. பி. டி. பியினரை முற்று முழுதாக வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் ஐ. தே. கவினர், தீவுப் பகுதி அரச உயரதிகாரிகள், ஈ. பி. டி. பியினர் ஆகியோர் ஒன்று சேர்ந்து வாக்காளர் அட்டைகளில் மோசடியும் குழப்படியும் செய்தனர்.

தேர்தல் அதிகாரியின் ஒப்பமின்றி சில தனி நபர்களது கையில் வாக்காளர் அட்டைகள் ஒப்படைக்கப்பட்டன என்று சிலர் இதுபற்றி கருத்துத் தெரிவித்தனர்.

நன்றி — சரிநிகர்.

★

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

சகல பாடசாலை புத்தகங்களும் குறித்த விலையில் இருந்து 5% கழிவுடன் விற்பனையாகின்றன. பாடசாலை உபகரணங்கள், கொப்பிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன நியாய விலையில் விற்பனையாகின்றன. ஞானம் புத்தக நிலையம், நாச்சிமார் கோயிலடி, 635, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (8063)

இவ்வாரம் தருவிக்கப்பட்ட புதிய 1995 மாதக்கலண்டர்கள் விற்பனைக்குண்டு. உங்கள் விலாசமிட்டு எம்மிடம் அழகாக மலிவாக பதிப்பித்தும் கொள்ளலாம். மகாலக்சுமி அச்சகம், 127, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (8066)

ஆறுகால்மடம் வண். வடமேற்கு மானிப்பாய் றோட்டில் 3 பரப்பு காணியில் வீடு விற்பனைக்குண்டு. தரகர் இல்லை. தொடர்பு: சந்திரசேகரா, 95, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில். (8078)

அப்பியாசக் கொப்பி

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936

விற்பனையாகிறது

சிவம் கலண்டர்கள் பொக்கற் கலண்டர்கள், வியாபாரத்திற்கு அடித்து கொடுப்பதற்குரிய சகல கலண்டர்களும், டயறிவகைகளும் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 165, மின்சார நிலையம். தலைமையகம்: மக்மிலன், யாழ்ப்பாணம். (சி-9929)

மலிவு விற்பனை

பாடசாலை மாணவர்களுக்குரிய புத்தகங்கள், கொப்பிகள், உபகரணங்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்: தினேஷ் பொத்தகசாலை, 19, பழைய பஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (34167)

ஜாதகப்பலன்

''Life Guide'' ஜாதகப் பலாபலன் விசேஷமாக நான்கு கேள்விகளுக்கு பதில். தொடர்புகொள்ளவும். வி. எஸ். செல்வராசா, கெல்லாவில் சந்தி, தாவடி றோட், சுதுமலை தெற்கு. (34175)

பெண் கட்டர் தேவை

ஆடை தயாரிப்பு நிலையம் ஒன்றுக்கு விதம் விதமாக மாதிரி உடைகள் வெட்டிக் கொடுப்பதிலும், மற்றும் உள்ளங்கி (பிறா) வெட்டித் தைப்பதிலும் பயிற்சி உள்ள பெண்கள் தேவை. 31 12-94 முன்பாக விண்ணப்பிக்கவும். இல. 728, பே/பா உதயன், யாழ்ப்பாணம் (சி 9883)

திருமந்திர விரிவுரை

யாழ்ப்பாணம், டிச. 14

கந்தர்மடம் ஸ்ரீசிவகுருநாத குருபீடம், வேதாந்த மடத்தில், சிவத்தமிழ் வித்தகர், திரு. சிவ. மகாலிங்கம் தொடர்ந்து 10 தினங்கள் ''திருமந்திரம்'' என்ற பொருளில் அரிய விரிவுரை நிகழ்த்தவுள்ளார்.

இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இவ்விரிவுரை, நாளை வியாழக்கிழமையும் இடம்பெற்று, அடுத்தவாரங்களில், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (க)

ரணிலின் கருத்து

கொழும்பு, டிச. 14

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின்மூலம் கருத்திணக்கம் காணப்படின் அதனை ஐக்கிய தேசியக்கட்சி ஏற்றுக்கொள்ளும்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா 'புரொன்ட்லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார். (எ)

ஏலவிற்பனை மருதமரம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள ஞானவைரவர் கோயில் வளவிலுள்ள ஒரு மருதமரம் 26-12-1994 காலை 10-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலவிற்பனையில் மரத்தைப் பெற்றுக்கொண்டவரே மரத்தைத் தறித்து எடுத்துச் செல்வதற்கான ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

மரத்தை எடுத்துச் செல்வதற்குமுன் உரிய பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மேலதிக விவரங்களை காரியாலய நேரத்தில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டாக்டர் (செல்வி) என். கனகரட்ணம்,
பணிப்பாளர்.

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
[சி-9820]

யாழ்ப்பாண மாவட்ட

அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்

அறிவித்தல்

கடந்த செப்டெம்பரில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளின் சான்றிதழ் வழங்கல் மற்றும் வெற்றிப் பதக்கம் அணிவித்தல் ஆகிய நிகழ்வுகளின் போது புகைப்படம் எடுப்பதற்குப் பதிவு செய்து கொண்ட வீரர்கள், வீராங்கனைகள் தங்களது படங்களை யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு. சண். தயாளனுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்தியோர் மற்றும் கழகங்கள் இது வரை அதற்கான ரசீதைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் அவற்றையும் திரு. சண். தயாளனுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
யாழ். மா. அ. மெ. சங்கம்,

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-9819]

நத்தார் கால

விற்பனை

- ✶ நத்தார், புதுவருட வாழ்த்துமடல்கள்
- ✶ நத்தார் அலங்காரப் பொருள்கள்
- ✶ கேக், குளிர்பான தயாரிப்புகள்
- ✶ எவர்சில்வர், விளையாட்டுப் பொருள்கள்
- ✶ சுவர், கைக்கடிகாரங்கள்
- ✶ மண்ணெண்ணெய் அடுப்புகள்

மற்றும்

பொலித்தீன் வகைகள், நெல்லுடைக்கும் - மா வரைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடவேண்டியது:

ராஜா ஸ்ரோர்ஸ்

67, 69, சந்நோசம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/9815)

31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

சங்கரப்பிள்ளை சுந்தரமூர்த்தி

(இளைப்பாறிய உதவி விவசாயப் பணிப்பாளர், பேராதனை)
(சின்னாலடி, காரைநகர்)

மலர்வு: 01 – 11 – 1931
உதிர்வு: 14 – 11 – 1994

அமைதியின் அணிகலனாய், அன்பின் பிறப்பிடமாய், பண்பாக வளர்ந்து, எங்கள் அனைவருக்கும் அறிவூட்டி நல்வழிகாட்டிய எம் தந்தையே! நீங்கள் நடமாடிய வீட்டில் இன்று படமாகி விட்டீர்களே!

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

34/17, ஒளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.
(34171)

விற்பனைக்கு

- ★ பிளைவுட் — ½ அங்.
- ★ தகரம் சிறிய பீலி 30 G. — 10 அடி, 6 அடி
- ★ ,, பெரிய பீலி 30 G. — 10 அடி
- ★ ,, ,, 32 G. — 6 அடி
- ★ அஸ்பெஸ்டஸ் சீற் - பீலி — 10 அடி (ASBESTOS SHEET)
- ★ அஸ்பெஸ்டஸ் சீற் பிளேன் — 4 அடி x 4 அடி

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,
248/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(34177)

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

- ✶ தெய்வேந்திரா - சாவகச்சேரி
- ✶ மகாத்மா - நெல்லியடி

ஆகிய திரையரங்குகளின்,

அகன்ற திரையில்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவாகிய

ந. கேசவராசனின்,

"பிஞ்சு மனம்"

'முழு நீளவர்ணப்படம்,

காட்சி நேரம் தினசரி - 6-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30
(சி/9886)

மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி

பாலர் முதல் பல்கலை மாணவர் வரை உங்களுக்குத் தேவையான

- ✶ பாடப்பயிற்சிப் புத்தகங்கள்
- ✶ பாடசாலை உபகரணங்கள்

அனைத்தும் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

புதியதோர் ஆரம்பம்

யாழ்ப்பாண பொத்தக நிலையம்

448, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
(சி/9946)

We Serve

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தால் 11-12-94இல் நடத்தப்பட்ட

அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு **4033**
2ஆம் பரிசு **2512**
3ஆம் பரிசு **3347**

ஆறுதல் பரிசில்கள்:

4278 **1282** **2048**
3234 **1064**

இதற்கான பரிசில்களை 18-12-94 மாலை 4-30 மணியளவில் கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும்.

— தலைவர்.

K. ஜெயராயதேவா,
நீதவான் இல்லம், பிரதான வீதி,
சங்கானை.
(34058)

பேராதனைப் பல்கலைக்கழக (வெளிவாரி) விரிவுரைகள்

கல்வியாண்டு 1994/95

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் (வெளி நிலைப்) பட்டப் பாட நெறிகளான

- ✶ கலைமாணி B. A.
- ✶ விஞ்ஞானமாணி B. Sc. (புள்ளி விவரவியல்)

- ★ க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.
- ★ கலைமாணி பட்டப்பாட நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் 180 புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.
- ★ விவரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10 செலுத்தி நேரில் / தபால் மூலம் விண்ணப்பிக்கலாம்.
- ★ விண்ணப்ப முடிவு திகதி: **31 — 12 — 1994**
- ★ விரிவுரைகள் **01 — 01 — 1995** இல் ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கடந்த 20 வருடங்களாக பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கும் நிறுவனம் யாழ். நகரில் இதுவே.

[சி-9809]

மெல்லக் கற்கும் மாணவருக்கு நூல்கள்

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புக்களில் உள்ள மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு உதவும் பொருட்டு புதிய நூல்கள் சிலவற்றை வெளியிடுவதற்குக் கோட்ட ஆரம்பக் கல்விப் பிரிவினர் முன்வந்துள்ளனர். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட விசேட ஆய்வொன்றினை அடிப்படையாகக் கொண்டு இந்நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

மெல்லக்கற்கும் மாணவர்களின் மொழித்திறன் விருத்தியைக் கருத்திற்கொண்டு ஆக்கப்பெற்ற 'இனிய தமிழ்ச் செயல் நூல்' என்னும் முதலாவது நூல் விரைவில் வெளிடப்படவிருப்பதாகவும், இதனைத் தொடர்ந்து கணிதம், அழகியல் ஆகிய பாடங்களுக்குரிய நூல்கள் வெளியிடப்படுமென்றும் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தெரிவித்தார். (க)

திருக்குறளை தந்த தமிழை சிங்களவர் படிக்க வேண்டும்

ஆணையாளர் பேச்சு

கொழும்பு, டிச. 14

உலக இலக்கியங்களில் ஒன்றான திருக்குறளைத் தந்துள்ள பழைமையும் சிறப்பும் பெற்ற தமிழ்மொழியை சிங்கள மக்கள் படிக்க வேண்டும்.

அரச கருமமொழிகள் திணைக்கள ஆணையாளர் நிமல் சமரசுந்தர முன்கண்டவாறு தெரிவித்தார்.

புத்தளம் செயலகத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் அவர் பேசினார்.

மொழிப்பிரச்சினை நாட்டை ஆட்டிப்படைத்து வந்துள்ளது. இதனால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்த நாட்டில் இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கவும் மொழிப் பிரச்சினையே காரணமாக இருந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

உதவி ஆசிரியர்

தெரிவுப் பரீட்சை

(பயிற்சி வகுப்பு)

மேற்படி பரீட்சைக்கான

- ✶ பொது உளச்சார்பு
- ✶ பொது அறிவு
- ✶ மொழி அறிவு

வகுப்புக்கள்

ஆரம்பம்: **19 - 12 - 1994**
[காலை 10-00மணி]

ஆசிரியர்: திரு அ. குமாரவேல்

★ அச்சடித்த பாடக்குறிப்புக்கள் வழங்கப்படும்

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி/9949)

கண்ணீர் அஞ்சலி

கடமையுணர்ச்சியுடன் பணியாற்றி எமது நீதிமன்ற அலுவலர்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்ற

அமரர் முத்தையா சிவஞானம்

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

நீதிபதியும், உத்தியோகத்தர்களும்.
மாவட்ட நீதிமன்று,
மல்லாகம்.

[34180]

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 01 — 01 — 1909

மறைவு: 25 — 11 — 1993

அமரர் சுப்பிரமணியம் பசுபதி

(சிங்கராயர் / சின்னையா உபாத்தியாயர்—மண்டைதீவு)

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர், யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை)

திதி: 14 – 12 – 1994

அன்பால், அறிவால், பண்பால், எங்களை எல்லாம் வழிநடத்தி வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டு இறைவன் பாதம் தொழுதிடச் சென்று ஆண்டு ஒன்று அகன்றாலும், உங்கள் அன்பு எம்மை விட்டகலாது.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

விக்னேஸ்வரா லேன்,
பாலாவோடை,
இணுவில் தெற்கு.
(34182

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

தொழில் நுட்ப மேம்பாடு

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை ஒதுக்குவதற்கு, தொழில்நுட்பக் கல்லூரிகள் பணிப்பாளர் நாயகம் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிதி ஒதுக்கீட்டிற்கு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுவதிலும் கல்லூரியின் மாணவர் அவைப் பிரதிநிதிகள் குழு ஈடுபட்டுள்ளது.

தங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக மாணவர்களே முன்னின்று உழைப்பது பாராட்டத்தக்கது. இது அவர்களுக்கு மட்டுமன்றி கல்லூரியின் வருங்கால மாணவருக்கும் உதவுவதாகும்.

கொக்குவிலிலுள்ள யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பத்தில் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியாகவே ஐம்பதுகளின் இறுதியில் தொடங்கப்பட்டது. இதனோடு ஆரம்பிக்கப்பட்ட கண்டி, காலி உட்பட்ட ஐந்து கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிகளைப் போலவே, இதுவும் பின்னர் முதலாந்தர தொழில்நுட்பக் கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்டது.

ஆனால் தென்பகுதியைச் சேர்ந்த முதலாந்தர தொழில் நுட்பக் கல்லூரிகளுக்குச் செய்யப்பட்ட வசதிகள் இங்கு வழங்கப்படவில்லை. நடுத்தர தொழில் நுட்பவியலாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பயிற்சி நெறி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அதேபோன்று புதிய தொழில் நுட்பமான கணனி பயிற்சியைப் பெறுவதற்கான பயிற்சி நெறியும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

தொழில் நுட்பக் கல்லூரி என்று பெயர் சொல்லி அழைப்பதற்கு மேற்சொன்ன இரண்டு பயிற்சி நெறிகளும் அடிப்படையானவை என்று கருதப்படக்கூடியவை. ஆனால் அவை இரண்டும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் இன்னும் தொடங்கப்படவில்லை. தமிழ்ப் பிரதேசத்தில் அமைந்துள்ளது என்பதால் இவ்வாறு மாற்றாந்தாய் போக்கு கடைப்பிடிக்கப்படுகிறது என்பதே உண்மை.

மேலும், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வரும் பயிற்சி நெறிகளை உரிய முறையில் நடத்துவதற்கான கட்டட, இயந்திர வசதிகள்தானும் இக் கல்லூரியில் இல்லை.

இத்தகைய ஒரு நிலையால், தமிழ் மாணவர்கள் தமது தொழில் நுட்ப அறிவை வளர்க்கமுடியாமலும், உரிய பயிற்சியைப் பெற முடியாமலும் பின்தள்ளப்படுகின்றனர். கடந்த பதினேழு வருட ஆட்சியின் கீழ் தமிழர்களுக்கான தொழில்நுட்பக்' கல்வி வசதி குறித்துக் கடுகளவேனும் அக்கறை காட்டப்படவில்லை.

இது நிச்சயமாக, அடிப்படை மனித உரிமை மீறலே. ஒருவர் கல்வி வசதி பெறவும், தனக்குள்ள திறனை வளர்க்கவும் அரசாங்கம் வசதி செய்து கொடுக்க வேண்டியது அதன் கடமை. ஐ. தே. க. அரசாங்கம் தன்னைத் தமிழர்களினதும் அரசாங்கம் என்று கருதாததால், தமிழ் மாணவரின் தொழில்நுட்பக் கல்வி வசதி குறித்து அக்கறை காட்டாது இருந்திருக்கலாம்.

அந்த நிலைமையை மாற்றி புதிய அரசாங்கம், தான் தமிழர்களுக்கும் உரியது என்ற நிலையை உருவாக்க விரும்பினால் தொழில் நுட்பக் கல்வி வசதி உட்பட்ட ஏனைய பல்துறை சார்ந்த வசதிகளையும் பாகுபாடு இல்லாது தமிழர்களுக்கும் வழங்க வேண்டும்.

புதிய அரசும் பழைய அரசின் அடிச்சுவட்டையே பின்தொடர நினைக்குமாயின், தமிழர்களே தங்களுக்குத் தேவையான சகலவற்றையும் சொந்தத்தில் செய்ய நேரிடும். அது தவிர்க்க முடியாததும் ஆகும்.

எனவே, தமிழர்கள் தமக்கான சேவைகளையும், பணிகளையும் தாமே அக்கறை கொண்டு, மட்டுப்படுத்தப்பட்டுள்ள தமது வளங்களைப் பயன்படுத்தியாவது முன்னேற வேண்டிய தேவை உருவாகியுள்ளது என்பதனை உணர வேண்டும்.

பாடசாலைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், டிச 14

ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் யாழ். மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் வருமாறு:—

யாழ். இந்து

★ கணிதம் — 4ஏ - இருவர், 3ஏ பி - நால்வர், 3ஏ சி- இருவர், 2ஏ 2பி - இருவர், 2ஏ பி சி - இருவர், 2ஏ 2சி - மூவர், ஏ 3பி - இருவர், ஏ2பி சி - ஒருவர், ஏ பி 2சி-ஐவர், ஏ பி சி எஸ் - இருவர், ஏ3சி- இருவர்.

★ மருத்துவம் — 4ஏ-இருவர், 3ஏ பி-இருவர், 2ஏ 2பி- நால்வர், 2ஏ பி சி - மூவர், 2ஏ பி எஸ் - இருவர், 2ஏ2சி- ஒருவர், ஏ 3பி - நால்வர், ஏ 2 பி சி - இருவர், ஏ 2பி எஸ் - ஒருவர்.

★ வர்த்தகம் — 3 ஏ பி - ஒருவர், 2ஏ 2பி - மூவர், 2ஏ பி சி - ஒருவர், ஏ3பி- மூவர், ஏ 2பி சி - இருவர், ஏ 2பி எஸ் - இருவர், ஏ பி 2சி இருவர், ஏ 3சி - ஒருவர்.

கலை — 3ஏ பி - ஒருவர், 3பி சி - ஒருவர்.

யாழ். இந்து மகளிர்

★ கணிதம் — 2பி சி எஸ்- ஒருவர்.

★ மருத்துவம்—2ஏ பி சி- இருவர், ஏ 3பி - ஒருவர், ஏ 2பி சி - மூவர், ஏ 2பி எஸ் - இருவர், ஏ பி 2சி - இருவர், ஏ பி சி எஸ் - இருவர், ஏ பி 2எஸ் - ஒருவர்.

★ வர்த்தகம் — 4ஏ - இருவர், 3ஏ பி - ஒருவர், 3ஏ சி- ஒருவர், 2ஏ 2பி - ஒருவர், 2ஏ பி சி - இருவர், 2ஏ 2சி - இருவர், ஏ 3பி - மூவர், ஏ 2பி சி ஐவர், ஏ பி 2சி - நால்வர்.

★ கலை — 2ஏ 2பி - இருவர், 2ஏ பி சி - ஒருவர், ஏ 2பி சி - இருவர், ஏ பி 2சி - மூவர், ஏ பி சி எஸ் - ஐவர், ஏ பி 2எஸ் - ஒருவர், ஏ 3சி - ஒருவர்.

கொக்குவில் இந்து

★ கணிதம் — 3ஏ பி - இருவர், 2ஏ பி சி - இருவர், 2ஏ 2சி - ஒருவர், ஏ 2பி சி - இருவர், ஏ 2பி எஸ் - ஒருவர், ஏ பி 2சி -ஒருவர், ஏ பி சி எஸ் ஒருவர், ஏ 3சி - ஒருவர்.

★ மருத்துவம்— ஏ 2சி எஸ் - ஒருவர், 3பி எஸ் ஒருவர், 2பி 2சி ஒருவர்.

★ வர்த்தகம் — 4ஏ - ஒருவர், 3ஏ பி - மூவர், 2ஏ 2பி- மூவர், 2ஏ பி சி - இருவர் ஏ 3பி - ஒருவர், ஏ 2பி சி - அறுவர், ஏ பி 2சி - இருவர், ஏ பி சி எஸ் - மூவர், ஏ பி 2எஸ் - ஒருவர், ஏ 3சி - நால்வர்.

★ கலை — 4ஏ ஒருவர், 2ஏ2பி-மூவர், ஏ 3பி -ஒருவர், ஏ 2பி சி - இருவர், ஏ பி 2சி- இருவர், ஏ பி சி எஸ்-ஒருவர், ஏ 3சி - ஒருவர்.

சென். பற்றிக்ஸ்

★ கணிதம் — 4ஏ — ஒருவர், 3ஏசி - ஒருவர், 2ஏ2பி- இருவர், 2ஏ பி சி - ஒருவர், ஏ பி சி எஸ் - ஒருவர்.

★ மருத்துவம் — 3ஏ சி - ஒருவர், 2ஏ 2பி - இருவர், ஏ 2பி சி - ஒருவர், ஏ 3சி - ஒருவர்.

★ வர்த்தகம் — 4ஏ - ஒருவர், 3ஏ பி -ஒருவர், 2ஏ2பி- நால்வர், ஏ 3பி - இருவர், ஏ 2பி சி - மூவர்.

★ கலை— 3ஏ சி - ஒருவர் 2 ஏ பி சி - இருவர், ஏ பி 2சி- ஒருவர்.

கனகரத்தினம் ம. ம. வி.

★ வர்த்தகம் — 4 ஏ - இருவர், 3 ஏ பி - ஒருவர், 2ஏ 2பி - ஒருவர், 2 ஏ பி சி - மூவர், ஏ 2 பி சி - நால்வர், ஏ பி 2 சி - மூவர், ஏ பி சி எஸ் - ஒருவர்.

★ கலை — 2 ஏ பி சி - ஒருவர், 4 பி - ஒருவர், 3 பி எஸ் - ஒருவர், 2 பி 2 சி - ஒருவர்.

சுண்டுக்குளி மகளிர்

★ கணிதம் — 2 ஏ பி சி - இருவர், ஏ 3 பி - ஒருவர், பி சி எஸ் - ஒருவர்.

★ மருத்துவம் — 3 ஏ சி - ஒருவர், 2 ஏ பி சி - ஒருவர், ஏ 2 பி சி - நால்வர்.

★ வர்த்தகம் — 2 ஏ 2 பி - ஒருவர், 2 ஏ பி எஸ் - ஒருவர், ஏ 3 பி - இருவர், ஏ 3 சி - ஒருவர்.

கலை — 4 ஏ - ஒருவர், 3 ஏ சி - ஒருவர், 2 ஏ 2 பி - மூவர், 2 ஏ பி எஸ் - ஒருவர், 2 ஏ 2 சி - ஒருவர், 2 ஏ சி எஸ் - ஒருவர், ஏ 3 பி - இருவர்.

சென். ஜோன்ஸ்

★ கணிதம் — 3 ஏ பி - இருவர், 2 ஏ பி சி - இருவர், ஏ 2 பி எஸ் - ஒருவர்.

★ மருத்துவம் — 3 ஏ பி - இருவர், 2 ஏ பி சி - மூவர், ஏ 2 பி சி - இருவர், ஏ பி 2 சி இருவர், ஏ பி சி எஸ் - ஒருவர்.

★ வர்த்தகம் — 3 ஏ பி - ஒருவர், 2 ஏ பி சி - ஒருவர், ஏ 3 சி - ஒருவர்.

செங்குந்தா

★ கலை — ஏ 2 பி சி - ஒருவர், 2 பி 2 சி - மூவர், 2 பி சி எஸ் - ஒருவர்.

யாழ். மத்திய கல்லூரி

★ கணிதம் — 3 ஏ பி - ஒருவர், 2 ஏ 2 பி - ஒருவர், ஏ 2 சி எஸ் - ஒருவர்.

★ மருத்துவம் — 3 ஏ பி - ஒருவர், 3 பி சி - ஒருவர்.

★ வர்த்தகம் — 2 ஏ 2 பி- இருவர், ஏ 2 பி சி - ஒருவர்.

★ கலை — 2 ஏ 2 சி - ஒருவர்.

வேம்படி மகளிர்

★ கணிதம் — ஏ 3 பி - ஒருவர், ஏ பி 2 சி - ஒருவர்.

★ மருத்துவம் - 2 ஏ 2 பி - ஒருவர், 2 ஏ பி எஸ் - ஒருவர், ஏ 2 பி சி - நால்வர், ஏ 2 பி எஸ் - மூவர், ஏ பி 2 சி - இருவர்.

★ வர்த்தகம் — 3 ஏ பி - ஒருவர், 3 ஏ சி - ஒருவர், 2 ஏ 2 பி - நால்வர், 2 ஏ பி சி - நால்வர், 2 ஏ 2 சி - இருவர், ஏ 3 பி - இருவர், ஏ 2 பி சி - மூவர்.

★ கலை — 2 ஏ 2 பி - ஒருவர், 2 ஏ பி சி - இருவர், 2 ஏ 2 சி - இருவர், ஏ 3 பி - ஒருவர், ஏ 2 பி எஸ் - ஒருவர், ஏ பி 2 சி - இருவர்.

சென். சாள்ஸ்

★ கலை — 2 பி 2சி - ஒருவர்.

கன்னியர் மடம்[ஆங்கிலம்]

★ மருத்துவம் — ஏ 3 சி - ஒருவர், 2 பி 2 சி - ஒருவர்.

★ வர்த்தகம் — 2 ஏ 2 சி - ஒருவர், ஏ 2 பி சி - இருவர், 3 பி சி - இருவர், 2 பி 2 சி - மூவர்.

கலை — 2 ஏ பி சி - இருவர், ஏ 2 பி எஸ் - ஒருவர், 3 பி எஸ் - ஒருவர்.

வைத்தீஸ்வரா

★ வர்த்தகம் — 2 ஏ 2 பி- ஒருவர், 2 ஏ பி எஸ் - ஒருவர், ஏ 2 பி சி - ஒருவர், ஏ பி 2 சி - ஒருவர், 2 பி 2 சி- ஒருவர்.

பெரியபுலம் ம. வி.

★ கலை — ஏ 3 பி - ஒருவர், 3 பி சி - ஒருவர், 2 பி சி எஸ் - ஒருவர்.

சாவகச்சேரி இந்து

★ கணிதம் — 4ஏ - மூவர், 3ஏ பி - ஒருவர், 2ஏ சி எஸ்- ஒருவர், ஏ 2பி எஸ் - ஒருவர், ஏ 3சி - ஒருவர்.

★ மருத்துவம் — 2ஏ 2பி- ஒருவர், ஏ பி 2சி - மூவர்.

★ வர்த்தகம் — 4ஏ - ஒருவர், 2ஏ 2பி - இருவர், 2ஏ சி எஸ் - ஒருவர், 2ஏ 2எஸ்- ஒருவர், ஏ3 பி - இருவர், ஏ2 பி சி - இருவர், ஏ2 பி எஸ்- இருவர், ஏ பி சி எஸ் - இருவர்.

★ கலை — 2ஏ 2பி - ஒருவர், 2ஏ பி சி - ஒருவர், 2ஏ சி எஸ் - ஒருவர், ஏ3 பி - ஒருவர், ஏ2 பி சி - ஒருவர், ஏ பி 2சி - மூவர், ஏ பி சி எஸ்-நால்வர்.

சாவகச்சேரி மகளிர்

★ வர்த்தகம் — ஏ2 பி எஸ் - ஒருவர், 3பி சி — ஒருவர்.

★ கலை — ஏ2 பி சி - இருவர், ஏ பி 2சி - இருவர்.

மீசாலை வீரசிங்கம் ம. வி.

★ கலை — 3ஏ எஸ் - ஒருவர், ஏ பி சி எஸ் - ஒருவர், 3பி எஸ் – ஒருவர்.

சாவகச்சேரி டிறிபேக்

★ வர்த்தகம் — 2ஏ 2பி- இருவர், 2ஏ பி சி - ஒருவர்,

கலை — 3பி சி - ஒருவர்.

கைதடி முத்துக்குமாரசாமி

★ கலை — 2சி 2எஸ் - ஒருவர்.

வேலணை
வை. துரைசாமி ம. வி.

மருத்துவம் — பி2 சி எஸ்- ஒருவர்.

★ கலை — பி2 சி எஸ்–ஒருவர்.

கரம்பன் ம. வி.

★ கலை — 3சி எஸ் - ஒருவர்.

புங்குடுதீவு ம. வி.

★ வர்த்தகம் ஏ3 பி - ஒருவர்.

★ கலை 2பி சி எஸ் - ஒருவர், சி3 எஸ் – ஒருவர்.

தியாகராஜா ம. வி.

★ வர்த்தகம் — பி சி 2எஸ் - ஒருவர், 2சி 2எஸ் – இருவர்.

★ கலை — 2சி 2எஸ் - ஒருவர்.

யாழ்ரன் கல்லூரி

★ வர்த்தகம் — 2ஏ சி எஸ் - ஒருவர், 4சி - ஒருவர்.

★ கலை — 2பி 2சி - ஒருவர், 2பி சி எஸ் - ஒருவர், பி2 சி எஸ் - ஒருவர்.

பருத்தித்துறை மெதடிஸ்ட் பெண்கள் பாடசாலை

★ கணிதம் — 3 ஏ பி - ஒருவர், 2ஏ 2பி-ஒருவர்.

★ மருத்துவம்— 2ஏ பி சி- ஒருவர், வர்த்தகம்— 3ஏ பி- ஒருவர், 3ஏ சி-ஒருவர், 2ஏ 2பி-மூவர்.

★ கலை — ஏ [illegible] ஒருவர்.

ஹாட்லி

★ கணிதம்— 4ஏ-நால்வர், 3ஏ பி-ஒருவர், 2ஏ 2பி-இருவர், 2ஏ பி சி-நால்வர், 2ஏ 2சி-இருவர், ஏ 2பி சி- அறுவர், ஏ பி 2சி-மூவர், ஏ பி சி எஸ்- இருவர்.

★ மருத்துவம் — 2ஏ 2பி- இருவர், ஏ 2சி எஸ்-இருவர், 3பி சி-இருவர்.

★ வர்த்தகம் — 3ஏ பி - மூவர், 2ஏ 2பி-நால்வர், 2ஏ பி சி-ஒருவர், ஏ 3பி-ஐவர், ஏ பி சி எஸ்-ஒருவர்.

புற்றளை ம. வி.

★ கலை — 2சி 2எஸ் - ஒருவர்.

வேலாயுதம் ம. வி.

★ கணிதம்—ஏ பி 2சி-ஒருவர், ஏ பி சி எஸ்-ஒருவர்.

★ மருத்துவம் — 2பி 2சி- ஒருவர், பி 2எஸ்-ஒருவர்.

★ வர்த்தகம் — 2ஏ 2பி- ஒருவர், 2ஏ பி சி - ஒருவர், ஏ 3பி-ஒருவர்.

வட-இந்து மகளிர்

★ மருத்துவம்—ஏ 2பி சி - ஒருவர்.

★ வர்த்தகம் — 2ஏ 2சி - ஒருவர், 3பி எஸ்-ஒருவர்.

★ கலை—2ஏ 2பி-ஒருவர், 3பி சி-ஒருவர்.

வல்லை சிதம்பரா

★ கணிதம்—ஏ 2பி சி-ஒருவர்.

★ மருத்துவம்—3பி சி-ஒருவர்.

★ வர்த்தகம் — ஏ பி சி எஸ்-ஒருவர், 2பி 2சி-ஒருவர்.

வல்லை மகளிர்

★ கணிதம்—ஏ 2பி எஸ் - ஒருவர், ஏ பி 2சி-ஒருவர்.

★ வர்த்தகம்—ஏ 3பி - ஒருவர், 3பி எஸ்-ஒருவர்.

★ கலை—2ஏ 2சி-ஒருவர்.

கரவெட்டி விக்னேஸ்வரா

★ கணிதம் — 4ஏ-ஒருவர், 2ஏ பி சி-ஒருவர், ஏ பி சி எஸ்- ஒருவர், ஏ 2சி எஸ்-ஒருவர்.

★ மருத்துவம் — 4ஏ - ஒருவர், 3ஏ சி-ஒருவர்.

★ வர்த்தகம் — 2ஏ 2பி- இருவர், ஏ 3பி - ஒருவர், ஏ 2பி சி-இருவர்–

★ கலை—2ஏ 2பி-ஒருவர், 2ஏ பி சி-இருவர், ஏ 2பி சி- இருவர், ஏ பி 2சி–இருவர்.

உடுப்பிட்டி மகளிர்

★ கணிதம் — 3சி எஸ்– மூவர், வர்த்தகம்—ஏ பி 2சி- இருவர், 3பி சி-இருவர்.

★ கலை — ஏ 2பி சி - ஒருவர், ஏ 2சி எஸ்-ஒருவர்.

உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

★ கணிதம்—ஏ பி 2சி-ஒருவர், ஏ பி சி எஸ்-ஒருவர்.

★ மருத்துவம்—3பி சி-ஒருவர், 2பி சி எஸ்-ஒருவர்.

★ வர்த்தகம் — 2ஏ பி சி- ஒருவர், 2ஏ பி எஸ்-ஒருவர், ஏ 2பி எஸ் - ஒருவர், ஏ பி சி எஸ்-ஒருவர்.

★ கலை—2பி 2சி-ஒருவர், 2பி சி எஸ்-ஒருவர்.

கட்டைவேலி ஞானாசாரியார்

★ கலை—2பி 2சி-ஒருவர், பி 3சி-ஒருவர்.

நெல்லியடி ம. வி.

★ கணிதம் — 3ஏ பி - ஒருவர், ஏ 2பி சி-ஒருவர்.

★ மருத்துவம்—2ஏ பி சி- ஒருவர், 3பி சி-ஒருவர்.

★ வர்த்தகம் — ஏ 2பி சி- மூவர், ஏ பி 2சி-ஒருவர்.

★ கலை— 2பி 2சி-ஒருவர்.

உடுத்துறை ம. வி.

★ கலை — 4சி - ஒருவர், பி 3சி-ஒருவர்.

மகாஜனா

★ கணிதம் — 2 ஏ 2 பி - இருவர், ஏ பி 2சி - மூவர்.

★ மருத்துவம் — 2 ஏ பி சி - ஒருவர், 3 பி சி - ஒருவர்

★ வர்த்தகம் — 4 ஏ - ஒருவர், 3 ஏ சி - ஒருவர், 2 ஏ 2 பி - நால்வர், 2 ஏ பி சி - ஒருவர்.

★ கலை — 3 ஏ பி - இருவர், 2 ஏ பி சி- இருவர்.

யூனியன்

★ கணிதம் — 2 ஏ பி எஸ்- ஒருவர் ஏ 3 பி - ஒருவர், ஏ பி 2 சி - ஒருவர்.

★ மருத்துவம் — ஏ 2பி சி- ஒருவர்

★ வர்த்தகம் — 4 ஏ - ஒருவர், 3 ஏ பி - இருவர், 2 ஏ 2 பி - இருவர், 2 ஏ 2சி - இருவர், ஏ 3பி - நால்வர்.

★ கலை — ஏ பி 2 சி- இருவர்.

வயாவிளான் ம. ம. வி.

★ கணிதம் — 4 ஏ - ஒருவர், ஏ 2 பி சி - இருவர்.

★ வர்த்தகம் — 2 ஏ பி சி- ஒருவர், ஏ பி 2 சி - மூவர்

★ கலை — 3 ஏ பி - ஒருவர், 3 ஏ சி - ஒருவர், 2 ஏ 2 சி - ஒருவர், ஏ 3 பி - ஒருவர்

இராமநாதன் கல்லூரி

★ வர்த்தகம் — 3 ஏ சி - ஒருவர், 2 ஏ 2 பி - ஒருவர், ஏ பி சி எஸ் - ஒருவர்.

★ கலை — ஏ 2 பி சி [illegible] வர், ஏ பி 2 சி - ஒருவர்.

[illegible]

★ வர்த்தகம் —பி 2 சி எஸ்

- ஒருவர்.

★ கலை 2 பி 2சி - ஒருவர், 2 பி சி எஸ் - இருவர்.

மானிப்பாய் மகளிர்

★ கணிதம் - 2 ஏ பி சி - ஒருவர்.

★ மருத்துவம் — 2பி சி எஸ் - ஒருவர்.

★ வர்த்தகம் — 3 ஏ பி - ஒருவர், ஏ 2 பி சி - ஒருவர்.

★ கலை — ஏ 2 பி சி - ஒருவர், ஏ பி 2சி- ஒருவர்.

மானிப்பாய் இந்து

★ கணிதம் — ஏ 3 பி - ஒருவர், ஏ பி 2 சி - ஒருவர்.

★ மருத்துவம் — 2 ஏ சி எஸ் - ஒருவர், 3 பி சி- ஒருவர்

★ வர்த்தகம் — 2 ஏ பி சி - ஒருவர், ஏ 2பி சி - இருவர்.

★ கலை — ஏ 2 சி எஸ் - ஒருவர்.

ஸ்கந்தா

★ கணிதம் — 2 ஏ 2 சி - ஒருவர், ஏ 2 பி சி- ஒருவர்.

★ மருத்துவம் — 2 பி சி எஸ் - ஒருவர்.

★ வர்த்தகம் — 2 ஏ 2 பி - ஒருவர், 2 ஏ 2சி - இருவர், ஏ 2 பி சி - மூவர்.

★ கலை — 2 ஏ 2பி - ஒருவர், ஏ 3 பி- ஒருவர், 4 பி - ஒருவர்.

நடேஸ்வரா

★ மருத்துவம் — ஏ 2 பி சி - இருவர், 3 பி எஸ் - ஒருவர்

★ வர்த்தகம்— ஏ பி 2 எஸ் -ஒருவர்.

★ கலை — 2 பி 2 சி - ஒருவர்.

இணுவில் மத்திய கல்லூரி

★ கலை — 2 பி சி எஸ் - ஒருவர்.

மானிப்பாய் மெமோரியல்

★ வர்த்தகம் — ஏ 2 பி சி- இருவர், ஏ பி 2 சி - ஒருவர்.

கலை — ஏ பி 2 சி - ஒருவர், ஏ பி சி எஸ் - ஒருவர்.

உடுவில் மகளிர்

★ கணிதம் — ஏ பி சி எஸ் - ஒருவர்.

★ மருத்துவம் — 3 ஏ சி - ஒருவர், 2 ஏ 2 பி - இருவர், ஏ 2பி சி - மூவர்.

★ வர்த்தகம் — 2 ஏ 2 பி - ஒருவர், ஏ 2 பி சி - இருவர்.

★ கலை — 2 ஏ 2 பி - ஒருவர், ஏ 2 பி சி - மூவர், ஏ பி சி எஸ் – நால்வர்.

இளவாலை கன்னியர்மடம்

★ கலை — ஏ2 பி சி - ஒருவர், ஏ3 சி - ஒருவர்.

மல்லாகம் ம. வி.

வர்த்தகம் — ஏ2 பி சி - இருவர்.

★ கலை — 2ஏ பி சி - ஒருவர்.

பண்டத்தரிப்பு மகளிர்

★ மருத்துவம் — பி3 சி - ஒருவர்.

வர்த்தகம் — 2ஏ 2பி - ஒருவர், 2ஏ பி சி - ஒருவர், 2பி 2சி - ஒருவர்.

★ கலை — ஏ3 சி - ஒருவர், பி சி 2எஸ் - ஒருவர்.

சங்கானை சிவப்பிரகாசா

★ கலை — 2பி சி எஸ் - இருவர், பி3 சி - ஒருவர்.

வட்டு இந்து

★ கணிதம் — 2ஏ 2பி - ஒருவர், ஏ பி 2சி - ஒருவர்.

★ மருத்துவம் — பி சி எஸ் -ஒருவர்.

★ வர்த்தகம் — ஏ2 பி சி- ஒருவர், 3பி சி — ஒருவர்.

★ கலை — 2பி 2சி - ஒருவர், 2ஏ 2சி — ஒருவர்.

யாழ்ப்பாணக் கல்லூரி

★ கணிதம் — 3ஏ பி - இருவர், 2ஏ 2பி - ஒருவர்.

★ மருத்துவம் — ஏ2 சி எஸ் - ஒருவர், 3பி சி - ஒருவர்.

★ வர்த்தகம் — 4 ஏ - ஒருவர், 2ஏ 2பி - ஒருவர்.

★ கலை — 2ஏ 2சி - ஒருவர்.

சுழிபுரம் விக்ரோறியா

★ மருத்துவம் — ஏ2 பி சி - ஒருவர், 2பி சி எஸ் - ஒருவர்.

★ வர்த்தகம் — 3ஏ பி- ஒருவர், ஏ3 பி - ஒருவர்.

★ கலை — ஏ3 பி - ஒருவர், ஏ2 பி சி — ஒருவர்.

அச்சுவேலி ம. வி.

★ வர்த்தகம் — ஏ3 பி - ஒருவர், ஏ2 பி சி — ஒருவர்.

★ கலை 3பி சி — ஒருவர்

அச்சுவேலி சென் திரேசாள்

★ கலை — 2பி சி எஸ் - ஒருவர்.

இடைக்காடு ம.வி.

★ கணிதம் — 4 சி - ஒருவர்.

★ மருத்துவம் — 3 சி எஸ் - ஒருவர்.

★ வர்த்தகம் — ஏ 2 பி சி - ஒருவர், 2 பி சி எஸ் - இருவர்.

★ கலை — ஏ 3பி - ஒருவர், 3 பி சி — ஒருவர்.

கோப்பாய் ம.வி.

★ வர்த்தகம் — ஏ 2 பி சி - ஒருவர், 3 பி சி - ஒருவர்,

புத்தூர் சோமஸ்கந்த

★ [illegible] — ஏ 2 பி சி - ஒருவர், ஏ பி 2 சி - ஒருவர், 4 பி - ஒருவர்.

★ கலை — ஏ 2 பி சி - ஒருவர்.

கடந்த வருடம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வினாப்பத்திரங்களும் அனுமதி அட்டைகளும் வந்தன.

அதனைத் தொடர்ந்து அவர்களுக்கும் இன்று பரீட்சை நடைபெற உள்ளது.

சென்ற வருடம் 9 ஆம் ஆண்டு பயின்ற மாணவருக்கு இப்பரீட்சை நடைபெறுவது நிச்சயமற்ற நிலையில் இருந்ததால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தவில்லை |

திடீர் எனப் பரீட்சை என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் சிறப்பாகத் தேறமுடியாத நிலை உருவாகும்—என்று பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

பாடசாலைக்கு காலையில் செல்க

இதே வேளை—

இன்று நடைபெறும் இந்தப் பரீட்சை குறித்து யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் விடுத்த செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

9ஆம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில்நுட்பச் சான்றிதழ் பரீட்சை 14. 12. 94 திகதி பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் எனக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. இப் பரீட்சைக்குத் தற்போது ஆண்டு 9 இலும், 10 இலும் பயிலும் மாணவர் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது ஆண்டு 9இலும், 10 இலும் கல்வி கற்கும் மாணவர்கள் மேற்படி பரீட்சைக்குத் தோற்றுமுகமாக இன்று 14ந் திகதி காலை எட்டு மணிக்கு தத்தமது பாடசாலைக்குச் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பாடசாலை அதிபர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் இம் மாணவர்களை பரீட்சை மண்டபங்களுக்கு அழைத்துச் சென்று பரீட்சை சிறப்பாக நடைபெறுவதற்கு மண்டப மேற்பார்வையாளர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்—என்றுள்ளது. (அ-173)

புலிகளுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரம் பேருக்கு — விடுதலைப் புலிகள் பயிற்சி அளித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

தமிழ் நாட்டில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புகளில் தமிழர் மீட்புப்படையும் ஒன்றாகும்.

தமிழர் மீட்புப்படையைப் பயன்படுத்தி தமிழ் நாட்டில் தனது பிடியை விரிவுபடுத்துவதும் அதன் மூலம் அகண்ட தமிழர் தனித்துவத்தை உருவாக்குவதுமே விடுதலைப் புலிகளின் உபாயமாகும்,

இதேவேளை —

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து இலங்கை மற்றும் இந்திய அரசுகள் தங்கள் கவலையை பர்மாவுக்குத் தெரிவித்துள்ளன.

பர்மியப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் விடுதலைப் புலிகளின் தளம் இல்லாத படியால், இது விஷயத்தில் தங்களால் உதவமுடியாதென்று பர்மிய அரசாங்கம் கூறிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கப்பல்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் சில வெளிநாடுகளைக் கோரியுள்ளன. எனினும் இந்த நாடுகள் தங்களுக்கு விடுதலைப் புலிகள் பற்றி எதுவுமே தெரியாது என்று கூறிவிட்டன — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நத்தாருக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தையில் அரச தரப்பில் யார் ஆதிக்கம் செலுத்துவர் என்பதில் போட்டி ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

''சமாதான வட்டத்திலுள்ள சமாதானப் பின்னணி நடவடிக்கைகளில்— இடம்பெறும் சம்பவங்கள் குறித்து தூதுக்குழுவில் இடம்பெறும், லயனல் பெர்னாண்டோ அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சமாதானக் குழுவில் உள்ள நவீன் குணரத்ன அண்மையில் அலரி மாளிகையில் வைத்து, ''ஹலோ லயனல் - சமாதானப் பேச்சுக்களுக்கு என்ன நடக்கிறது?''— என்று கேட்க—

லயனல் பெர்னாண்டோவிடமிருந்து 'பட்' என்று [illegible] வந்தது.

''எனக்கு ஒன்றுமே தெரியாது. இவ்விஷயங்கள் பற்றி நீங்கள் தான் எனக்குச் சொல்லவேண்டும்.''— என லயனல் பதிலளித்தார் என்று ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டுள்ளது.

இன்று

யாழ். ஐக்கிய நாணய சங்க சமாசத்தின் யாழ். உதவி அரச அதிபர் பிரிவு பிராந்திய சபையின் விசேட கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். சென் சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (ஒ-30)

★ ★ ★

சாவகச்சேரி நகரசபை பொது நூல்நிலைய வாசகர் வட்டத்தின் மாதாந்த அறிவியலரங்கு இன்று புதன் பி.ப.3-30 மணிக்கு நகரசபை சபா மண்டபத்தில் வட்டத் தலைவர் சி. நடராசா தலைமையில் நடைபெறும்.

பேராசிரியர் நா. சுப்பிரமணியம் ''தமிழர் சைவ நெறிகள்'' என்னும் பொருளில் உரையாற்றுவார்.

அளவெட்டியில் மாடுகளுக்கு நாளை தடுப்பூசி

தெல்லிப்பளை கால்நடை வைத்தியர் பிரிவில் உள்ள அளவெட்டி தெற்கு, அளவெட்டி மேற்குப் பகுதிகளிலுள்ள மாடுகளுக்கு, நாளை வியாழக்கிழமை தொண்டை அடைப்பான் தடுப்பூசி போடப்படவுள்ளது.

காலை 9 மணி முதல் 11 மணி வரை: மல்லாகம் நீலியம்பனை பிரிவில்— நீலியம்பனை பிள்ளையார் கோயில் வீதியில்.

★ முற்பகல் 11 மணி முதல்: அளவெட்டி தெற்கில் உள்ள முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தில்.

(ஒ-152)

பரிசில் நாள்

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின் பரிசில் நாள் கடந்தமாதம் 3ஆம்திகதி பாடசாலை அதிபர் திரு. அ. பொ. செல்லையா தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு சி. இளம்பரிதி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தென்மராட்சிக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கமும் விழாவில் உரைநிகழ்த்தினார்.

3 பாடசாலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலைப் பிரிவில் முதல் இடம் பெற்ற ஸ்ரீவரதராஜன் பிரசாந்தனும் யாழ். இந்துவைச் சேர்ந்தவராவார். இவர் '3ஏ பி' பெறுபேறைப் பெற்றுள்ளார்.

சாவகச்சேரி இந்துவைச் சேர்ந்த ந. பிரபாகரன், அ. தயானந்தன், சோ. நிரஞ்சயன் ஆகியோர் கணிதப் பிரிவிலும், க. மங்களேஸ்வரன் வர்த்தகப் பிரிவிலும் 4 'ஏ' பெற்றுள்ளனர்.

ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த இராஜேந்திரம் முகுந்தன், இந்திரலிங்கம் தர்மேந்திரா, நந்தகோபால் சிவதாஸ், கிருஷ்ணபிள்ளை செல்வராசா ஆகியோர் கணிதப் பிரிவில் 4 'ஏ' பெற்றுள்ளனர். இவர்களில் இராஜேந்திரம் முகுந்தன் யாழ். மாவட்டரீதியில் முதல் இடத்தையும் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

வர்த்தகப் பிரிவில் —

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தயாளினி கனகலிங்கம், அம்பிகை ராமுப்பிள்ளை —

கனகரத்தினம் ம.ம.வியில் பேரின்பம் மதிதரன் (யாழ். மாவட்டத்தில் முதலிடம், தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம்), கனகசபை சுதாகரன் —

மகாஜனாவில் கனகரட்ணம் சுபாஜினி —

யூனியன் கல்லூரியில் குணதாசன் பாமினி —

யாழ்ப்பாணக் கல்லூரியில் அ. சபேசன் —

ஆகியோர் 4 'ஏ' பெற்றுள்ளனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் வர்த்தகப் பிரிவில் தம்பிநாதன் யோகரன், கலைப் பிரிவில் சிறிதரன் உமாசுந்திரன் —

சென். பற்றிக்ஸ் கல்லூரியில், கணிதப் பிரிவில் பஸ்தியாம்பிள்ளை றெமிங்டன் யூஜேந்தன், வர்த்தகப் பிரிவில் [illegible] —

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கலைப் பிரிவில் [illegible] சண்முகலிங்கம் —

வயாவிளான் ம. ம. வியில் கணிதப் பிரிவில் ஐ. சதானந்தன் —

ஆகியோர் நான்கு பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றவர்.

[illegible] கல்லூரியில், கணிதப் பிரிவில் பரமேஸ்வரன் சிவ்தர்மனும், மருத்துவப் பிரிவில் பொன்னம்பலம் ஞான[illegible] பெற்றனர். இவர்களில் பொன்னம்பலம் ஞானகுடா நாட்டில் முதலிடத்தைப் பெற்றார். (உ)

மரண அறிவித்தல்கள்

நாகலிங்கம் சுப்பிரமணியம்

(மலேயன் பார்மஸி முன்னாள் உரிமையாளர்)

மலேசியாவில் பினாங் என்னுமிடத்தை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியைச் சேர்ந்தவரும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுப்பிரமணியம் 13-12-1994 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்-அன்னமுத்துவின் மூத்த மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், மங்கையர்க்கரசி (கனடா), பாலச்சந்திரன் (சவூதி), பாலசரஸ்வதி, சந்திரிக்காதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜசுந்தரம் (கனடா), சரோஜினி, மனோகரன் (ஜேர்மன்), இராசேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட ரவிக்குமார், சிவக்குமார், கௌரிதேவி, ராஜ்குமார், உமாதேவி, விக்னகுமார் ஆகியோரினதும் சத்தியா, சசிகலா, சியாமளா, சிவகலா சகுமார், கௌரிசங்கர், காயத்திரி ஆகியோரினதும் அன்புப் பேரனும், அனுஷா, யதுர்சன், தக்சன், பவித்திரா, பௌதாரனி துளசி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14-12-1994) புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இராசேஸ்வரன்
(மருமகன்)

50/2, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(34184)

சலமோன் சூசைப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்)

குருநகர் மவுண்கார்மேல் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாக கொண்டவருமாகிய சலமோன் சூசைப்பிள்ளை நேற்று (13-12-94), இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் லூர்த்தம்மாவின் (பூமணி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சலமோன் - அக்னஸ் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், சுவாம்பிள்ளை - எலிசபெத் ஆகியோரின் அன்பு மருமகனும், மரீனாவின் (டக்கி) அன்புத்தந்தையும், ஜோசப் அல்பிரட் (இராஜசிங்கம் விற்பனைப் பிரதிநிதி உருக்குக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மாமனாரும், நீல்மரீன், நொய்லீன் மரீன், நொயல் மரீன், நெல்சி மரீன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலம்சென்ற அன்னம்மா (மரியப்பிள்ளை), மரியாம்பிள்ளை, கிலமென்ரா செல்வம், மனுவல்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அல்பிரட் டக்கி
(மகன்)

'ஆவே மரியா,
புனித அடைக்கலமாதா வீதி,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(34189)

கே.வி. தெய்வேந்திரன் [கொட்டடி]

[முன்னாள் யாழ். மாநகரசபை உதவி மேயர்]

முன்னாள் யாழ். மாநகரசபை உதவி மேயர் கே.வி தெய்வேந்திரன் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், இந்திரகுமார் [லண்டன்], அவர்களின் அன்புத் தந்தையும், வாணியின் அன்பு மாமனாரும், பரமலிங்கம், இராசலிங்கம், சின்னத்துரை, கனகலிங்கம், செல்வநாயகம், பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14-12-94 புதன்கிழமை இன்று பிற்பகல் 2.00 மணிக்குக் கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் [illegible]வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கே.வி. ஜெயலிங்கநாதன்
[பெறாமகன்]
கொட்டடி

913, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

[34191]

திருமதி மகேஸ்வரி நடராஜா

உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், ''ராஜஸ்தான்'' கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி மகேஸ்வரி நடராஜா 9-12-94 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் [ஓவசியர்] அன்பு மனைவியும், பரமேஸ்வரனின் [உதவி இரசாயனவியலாளர் கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம், புல்மோட்டை], அருமைச் சகோதரியும், இராஜேஸ்வரி, சர்வேஸ்வரி [வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்], ஸ்ரீநிவாசன் [Holland], பத்மினி, புஸ்பமாலா, ஸ்ரீரஞ்சன்[Holland] ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் [மலேரியா தடைப்பகுதி மேற்பார்வையாளர்], செல்வரட்ணம் [ப நோ.கூ. சங்கம் நல்லூர்], லீலாவதி [Holland], பரஞ்சோதி [ஓய்வுபெற்ற மலேரியா தடைப்பகுதி உத்தியோகத்தர்], மரியாம்பிள்ளை [ஆசிரியர் நானாட்டான்], சுலாமதி [Holland] ஆகியோரின் அன்பு மாமியாரும் பரமேஸ்வரி (பிரதேச செயலகம் நல்லூர்) அவர்களின் அருமை மைத்துனியும், சுஜீவா (பிரதேச செயலகம் நல்லூர்), சிவதீஷ், சஞ்ஜீவ் ஆகியோரின் அன்பு அத்தையும், நளினா, மதிஷன், துஷாந்தன், சிந்திகா, வர்ஷினி (Holland), பிரபாலினி, பிரதீபன், சர்மிளா, வட்சன், கீர்த்திகா, துஷிக்கா, கிதுஷன்(Holland), யதுசன் (Holland) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று புதன்கிழமை [14-12-94] நண்பகல் 12.00 மணிக்கு தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
குடும்பத்தினர்

''ராஜஸ்தான்''
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

[34187]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14-12-94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மானநஷ்டம் கோரி தாக்கலான

சந்திரிகாவுக்கு எதிரான வழக்கு தள்ளுபடியானது

கொழும்பு, டிச. 14

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக தொடரப்பட்ட மானநஷ்ட வழக்கை கொழும்பு மேலதிக நீதிபதி உபாலி அபயரத்ன நேற்று தள்ளுபடி செய்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ஆர். ஆர் எம். அஜித்குமார, தம்மை அவமானப்படுத்தும் வகையில் சந்திரிகா குமாரதுங்க உரையாற்றியதாகவும்— தமக்கு 50 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்க உத்தரவிடுமாறும் — கோரி வழக்கு ஒன்றை நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 35 / 1 பிரிவின் கீழ் ஜனாதிபதி தொடர்பாக விசாரணை செய்யும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு இல்லை என்று கூறி வழக்கை நீதிபதி நேற்று தள்ளுபடி செய்தார். (ஓ-3-4)

ஜி. சி. ஈ. பரீட்சை

ஆள்மாறாட்டம் செய்த மாணவர் பிடிபட்டனர்

யாழ்ப்பாணம், டிச. 14

ஆள்மாறாட்டம் செய்து க. பொ. த .சாதாரண பரீட்சைக்கு தோற்றிய மூன்று தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பிடிபட்டனர்.

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள பரீட்சை நிலையம் ஒன்றில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக தோற்றிய மூன்று பேரே பிடிபட்டனர்,

ஆள்மாறாட்டம் செய்தவர்கள் மேற்பார்வையாளரிடம் வகையாகமாட்டிக் கொண்டதை அடுத்து, மேற்பார்வையாளரை தாக்க முற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதுபற்றி மேலிடத்திற்கு பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் முறைப்பாடு செய்ததை அடுத்து ஆள்மாறாட்டம் செய்த மூவரும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

ஆள்மாறாட்டம் செய்த மூவரும் ஆண்கள். பிரபல கல்லூரிகளின் உயர்வகுப்பு மாணவர்கள் என்றும் அறியப்படுகின்றது. (அ- 11)

முன்னாள் அமைச்சர்கள் மீது விசாரணை

கொழும்பு, டிச. 14

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்னாள் அமைச்சர்கள் மூவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க உள்ளது.

இவர்களில் இருவர் இப்போது எதிர்க்கட்சி எம். பிக்களாக உள்ளனர்.

இலஞ்ச, ஊழல் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கென உருவாக்கப்பட்ட நிரந்தர ஆணைக்குழு நாளை முதன் முறையாகக் கூடுகிறது. [அ-6]

சிறுமி நேற்று மரணம்

யாழ்ப்பாணம், டிச. 14

செப்ரிசீமியா நோயின் தாக்கத்தினால் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று ஒரு சிறுமி உயிரிழந்தார்.

புத்தூரைச் சேர்ந்த நாகரட்ணம் அனுஷியா [வயது9] என்ற சிறுமியே மரணமானவர் ஆவார். [ஓ-15]

அலுவலகர் (OFFICER)
பதவி வெற்றிடம்

தகைமைகள்:

1) சரளமாகத் தமிழ், ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல்.
2) அலுவலகமொன்றில் அல்லது நிர்வாக சேவையில் பணிபுரிந்த அனுபவம்.
3) வெளிநாடொன்றில் பணிபுரிந்தமை விசேட தகைமையாகக் கருதப்படும்.

மேற்குறித்த தகைமைகளையுடையோர் 17-12-94 (சனிக்கிழமை) காலை 9-00 மணிக்கு எமது அலுவலகத்தில் (நந்தவனம், நவாலி வீதி, ஆனைக்கோட்டை) நடைபெறவுள்ள நேர்முகத் தேர்விற்கு தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

(34176)

வீ. எம். கே.யின்
வாடிக்கையாளர்களுக்கு
ஓர் அன்பானதும் பணிவானதுமான
வேண்டுகோள்

உங்கள் தங்க ஆபரணங்களை விற்க வரும்போது தவறாமல் உங்கள் ஆள் அடையாள அட்டையை அல்லது குடும்ப அட்டையைக் கொண்டுவரும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

வீ. எம். கே. நகைமாளிகை,
யாழ். வீதி,
சாவகச்சேரி.

[34181]

எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்)
41¹/1, K.K.S. Rd.
யாழ்ப்பாணம்.

(கொக்குவில் இந்து அருகில்)
27, K.K.S. Rd.
கொக்குவில்

ஆண்டு 4 முதல் O/L வரை
2 ஆவது புதிய பிரிவு
ஆரம்பமாகிவிட்டது:- 12-12-1994

★ கணித விஞ்ஞானத்தில் O/L ற்கு ஆண்டு 9,10 பாடத்திட்டமும் ஆண்டு 10 ற்கு ஆண்டு 9 பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.

★ ஆண்டு 8 'இனநிலைத் தேர்வு' வகுப்பிற்கு விசேட ஆசிரியர்கள் மூலம் வகுப்புகள் நடைபெறுகின்றன.

★ பொறியியல், மருத்துவ பீட மாணவர்களால் கணி[illegible] புகள் நடைபெறும்.

[illegible]

மழைக்காக காத்திருக்கும் விவசாயிகள்!

சுழிபுரம், டிச. 14

பொன்னாலைப் பகுதியில் உள்ள வயல்களிலுள்ள நெற்பயிர்களுக்கு தண்ணீர் தேவையாக வுள்ளது. ஒவ்வொரு வயல் உரிமையாளரும் ஆயிரக்கணக்கான ரூபாவைச் செலவு செய்து, புல்களைப் பிடுங்கி பயிர்கள் வளர மழையை எதிர்பார்த்தபடி இருக்கின்றனர். [ஓ-28]

கூட்டுறவு பெரியாருக்கு அஞ்சலி

சண்டிலிப்பாய், டிச. 14

கூட்டுறவுப் பெரியார் அமரர் வி. வீரசிங்கத்தின் 80-ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த 5 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச் சங்க முன்றிலிலுள்ள அன்னாரின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

சங்கத் தலைவர் திரு. மா. செல்வராஜா மலர் மாலை அணிவித்து, அங்கு உரையாற்றுகையில் வட பகுதியில் கூட்டுறவு இயக்கத்தை கட்டி எழுப்பி அதன் மகத்துவத்தை உலகறிய செய்தவர் அமரர் வீரசிங்கம் என்றும், அவரது சேவைகளை எமது இளம் சந்ததி அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டார். (க- 135)

உணவுப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாவட்டத்தில் உள்ள சகலருக்கும் அத்தியாவசிய சேவைகளை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

உணவு விநியோகத்துக்கு இதுவரை புனர்வாழ்வுப் பிரிவு பொறுப்பாக இருந்தது.

இதுவரை இயங்காமல் இருந்த உணவுக் கட்டுப்பாட்டு திணைக்களம் இனிப் பொருள்களை தருவித்து சகலருக்கும் வழங்கும். அந்தத் திணைக்களம் உடன் தனது பணியை ஆரம்பிக்கும்.

★ ப. நோ. கூ. சங்கங்கள் தமது விற்பனைக்குத் தேவையான பொருள்களை கொழும்பில் இருந்து தமது பணத்தில் கொண்டுவர செயலகம் உதவிகள் வழங்கும்.

★ தனியார் நிறுவனங்களும் யாழ் மாவட்டத்துக்கு தேவையான பொருள்களைக் கொண்டுவருவதற்கு ஊக்கமளிக்கப்படும்.

★ கூ.மொ.வி. திணைக்களகிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறக்க ஏற்பாடாகும்.

★ கொழும்பில் இருந்து பொருள்களை எடுத்து வர செயலகம் கப்பல் வசதிகளை செய்யும்.

★ தொழில் இழந்த மீனவர்களுக்கு மாதாந்தம் நிவாரணம் வழங்கப்படும்.

★ கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரணத்தை அரசுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

★ கொழும்பில் இருந்து பொருள் எடுத்து வருவதற்கான சிபார்சுப் பத்திரங்களை வழங்க அதிகாரம் பெற்ற அதிகாரிகளாக மேலதிக அரச அதிபரும், திட்டப் பணிப்பாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். [அ-3]

இரகசியங்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூவரும் சம்பந்தப்பட்டிருப்பதாக பொலீஸார் சந்தேகிக்கின்றனர். கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கார், கத்தி ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலீஸார் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

உள் இரகசியங்கள் வெளியாகாமல் தடுக்க உதய சூரிய குமாரவை கொல்லும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கொலைச் சம்பவம் பற்றி விசாரணை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி வெள்ளவத்தை பொலீஸார் பணிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை —

படையினர் மற்றும் பொலீஸார் தவிர ஈ. பி. டி. பி. மற்றும் புளொட் போன்ற அமைப்புகள் ஆயுதங்கள் வைத்திருக்க அதிகாரம் வழங்கப்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் வனசிங்க தெரிவித்தார். (உ-எ)

இதோ! உயிர் காக்கும்

பாதுகாப்பு கையேடு!

போர் விமானங்கள்
முகடுகளை உரசும்
இன்றைய நாட்களில்
வீட்டுக்கு வீடு இருக்க வேண்டிய
உயிர்காக்கும் பாதுகாப்புக் கையேடு



✶ 25 ரூபா ✶ 52 பக்கங்கள்
✶ 45 விளக்கப் படங்கள்

இது, தமிழீழ விடுதலைப்புலிகளின்
வெளியீட்டுப் பிரிவின் வெளியீடு

(34183)

மரண அறிவித்தல்கள்

க. க. நல்லையா மாஸ்ரர்

கொக்குவில், பிரம்படியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் க. க. நல்லையா அவர்களின் மரண அறிவித்தல் 11 - 12 - 94 இல் அறிவித்தபடி—

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 14-12-94 புதன்கிழமை நண்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. ந. சிவராசா
(மகன்)

சற்குணராசா & பிறதேஸ்,
பிரம்படி லேன்,
கொக்குவில்.

(34185)

திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை

காரைநகர் மணற்பிட்டியைச் சேர்ந்த பத்மாவதி கணபதிப்பிள்ளை 12 - 12 - 94 இல் காலமானார்.

இவர் காலம்சென்ற ஆசிரியர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், அருளாம்பிகை, அரிச்சந்திரன், வைத்திய கலாநிதி அம்பிகைபாகன் ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும், காலஞ்சென்றவர்களான வர்த்தகர் சிதம்பரப்பிள்ளை (லோயர் — பசறை), ராசம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற நகுலேஸ்வரன், காலஞ்சென்ற நயினலட்சுமி மற்றும் கமலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரபல வர்த்தகர் சின்னத்தம்பி, சிவசிதம்பரம், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13 - 12 - 94 இல் காரைநகரில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr. க. அம்பிகைபாகன்
(மகன்)

341, றக்கா ஒழுங்கை,
சுண்டிக்குளி.

(34190)

திருமதி கந்தையா வள்ளிமுத்து

சாவகச்சேரி பெரியமாவடியைச் சேர்ந்த கந்தையா வள்ளிமுத்து நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், மாலினி (நாதன் கூல்பார்), பரமேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கதிர்காமநாதன், வரதலட்சுமி [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும், சர்மினன் [கனடா], கோமாஜினி, சுமணன், ஜீவிதா, ஜனிதா [கனடா] ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [14-12-94] பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. மாலினி
[மகள் - நாதன்ஸ் கூல்பார்]

[34192]